# “நீலக் கடல்களின் பராமரிப்பில் நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கி ”

ஆண்டு அறிக்கை

2014

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

**சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு**

# உள்ளடக்கங்கள்


| | | |
|---|---|---|
| 1. | பின்னணி | |
| 1.1 | அறிமுகம் | 8 |
| 1.2 | அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் | 8-10 |
| 2. | நிருவாக அறிக்கை | 11-12 |
| 3. | கணக்காய்வு, முகாமைத்து குழுவின் அறிக்கை | 13-14 |
| 4. | தொழிற்பாடுகளின் மதிப்பாய்வு | 15-22 |
| 5. | நிருவாக, சட்ட, மனித வளங்கள் அபிவிருத்தி, உள்ளகக் கணக்காய்வு, மற்றும் நிதிப் பிரிவுகளின் சேவைகள் மற்றும் பொறுப்புக்கள் | |
| 5.1 | நிருவாகப் பிரிவு | 23 |
| 5.2 | சட்டப் பிரிவு | 24-25 |
| 5.3 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 25-26 |
| 5.4 | மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு | 26-27 |
| 5.5 | நிதிப் பிரிவு | 28-30 |
| 6. | அதிகார சபையின் கணக்கீட்டுக் கொள்கைகள், நிதிசார் கூற்றுக்கள் மற்றும் அதிகார சபையின் குறிப்புகள் | |
| 6.1 | கணக்கீட்டுக் கொள்கைகள் | 31-34 |
| 6.2 | 31.12.2014இல் உள்ளவாறு நிதிசார் நிலையின் கூற்று | 35 |
| 6.3 | 31.12.2014இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் தொழிற்பாடுகளின் கூற்று | 36 |
| 6.4 | 31.12.2014இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிகர சொத்துக்களினதும், உரித்துரிமைகளினதும் மாற்றங்களின் கூற்று | 37 |
| 6.5 | 2014ஆம் ஆண்டுக்கு பணப்பாய்வு கூற்று | 38 |
| 6.6 | நிதிசார் கூற்றுக்களின் மீதான குறிப்புகள் | 39-50 |
| 6.7 | 2010இலிருந்து 2014 வரையிலான ஆண்டுகளுக்கான நிதிசார் நிலையின் கூற்றுக்கள் | 51 |
| 6.8 | 2010இலிருந்து 2014 வரையிலான ஆண்டுகளுக்கான நிதிசார் நிலையின் கூற்றுக்கள் | 52 |
| 7. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 53-63 |




1981இன் முன்னாள் கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தின் இல. 59இன் கீழ் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பதற்கும், தணிப்பதற்கும் அத்துடன் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் இலங்கைக்கு பிரயோகித்தக்க கடல்சார் தீழ்ப்பு மீது சர்வதேசச் சமவாயங்களை அமுல்படுத்துவதற்கும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையில் சட்டபூர்வ அதிகாரங்களை பலப்படுத்துவதற்காக புதிய 2008இன் கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டம் இல.35 இயற்றப்பட்டதுடன், இது 2009 ஜனவரி 01 அன்று செயற்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

# கூட்டாண்மைத் தகவல்

## அதிகார சபையின் பெயர்:

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

## சட்டபூர்வ நியதியாக்கங்கள்

**2008இன் கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டம் இல.35இன் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு கட்டுப்படுத்தும் அதிகார சபை**

**பதிவு செய்யப்பட்ட விலாசம் மற்றும் தலைமை அலுவலகம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
758, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.
தொலைபேசி: 011-2687520/011-2690604/011-2690605
∴பக்ஸ்: 011-2687451/011-4615960
ஈ-மெயில்: info@mppa.gov.lk இணையதளம்: mppa.gov.lk

## பணிப்பாளர் சபை

### தலைவர்

**திரு.ரி.என்.விஜேகுணவர்தன
(இளைப்பாறிய பிரதி பொலிஸ் மா அதிபர்) (15.05.2013 அன்று நியமிக்கப்பட்டார்)**

### பணிப்பாளர்கள்

**திரு.ஆர்.எ.ஆர்.ஆர்.ரூபசிங்க
மேலதிகச் செயலாளர், மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சு**

**கொமடோர் என்.பி.ஆட்டியகல
பணிப்பாளர் - செயற்பாடுகள், இலங்கைக் கடற்படை**

**திருமதி எஸ்.என். மாயாதுன்னே பண்டார
சட்ட ஆலோசகர், வெளி விவகார அமைச்சு**

**திரு.பி. எஸ்.எம்.ஜயதிலக்க
உதவிப் பணிப்பாளர்,
திட்டமிடல் திணைக்களம்**

**திரு.எச்.எம்.பீ.சி.ஹேரத்
மேலதிகச் செயலாளர்,
மீன்பிடி அமைச்சு**

**திரு.எ.டபிள்யு.செனிவிரத்ன
பணிப்பாளர் நாயகம், வணிக் கப்பற்றுறை திணைக்களம்**

**திரு.மகேஷ் கட்டுலந்த
சட்டத்தரணி
(அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்)**

**திரு.ஜே.எ.எ.ரணசிங்க
(அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்)**

**கலாநிதி பி.பீ.தேர்னி பிரதீப் குமார
பொது முகாமையாளர்
(04.08.2014 அன்று நியமிக்கப்பட்டார்)**

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபைக்கான அடைதல்

**தலைமை அலுவலகம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
758, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.
தொலைபேசி: 011-2687520/011-2690604/011-2690605
∴பக்ஸ்: 011-2687451/011-4615960
ஈ-மெயில்: info@mppa.gov.lk இணையதளம்: mppa.gov.lk

**1. மேற்கு மற்றும் வட மேற்கு மாகாண அலுவலகம் மற்றும் கொழும்பு மாவட்ட அலுவலகம்**
758, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.
தொலைபேசி: 011-2687520/011-2690604
∴பக்ஸ்: 011-2687451/011-4615960

**2. மாவட்ட அலுவலகம் - களுத்துறை மாவட்டம்**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை**
இல. 187, கொழும்பு வீதி, பேருவளை.
தொலைபேசி: 034-2298407/071-8100821
∴பக்ஸ்: 034-2298407

**3. தென் மாகாண அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகம் - காலி**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
04, குளோசன்பேக் வீதி,
மாகலே,காலி.
தொலைபேசி: 091-2233547/071-8214184
∴பக்ஸ்: 091-2233547

**4. மாவட்ட அலுவலகம் - மாத்தறை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
இல.18 வில்மட் பாலசூரிய மாவத்தை,
நூபே, மாத்தறை.
தொலைபேசி: 041-2234250/ 071-4926849
∴பக்ஸ்: 041-2234250

**5. மாவட்ட அலுவலகம் - ஹம்பாந்தோட்டை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
46, இரண்டாவது தளம், நிருவாகத் தொகுதி,
சிரிபோபுர, ஹம்பாந்தோட்டை.
தொலைபேசி: 047-2222372/071-3624651
∴பக்ஸ்: 047-2256372

**6. மாவட்ட அலுவலகம் - அம்பாறை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
பிரதேச சபைக் கட்டிடம், பட்டின சபை வீதி,
தம்புலுவில்
தொலைபேசி: 067226516
∴பக்ஸ்: 067226516

**7. கிழக்கு மாகாண அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகம் - திருகோணமலை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
04ஆவது மைல் கல், சீனன்குடா, திருகோணமலை.
தொலைபேசி: 026-2050805/071-8383363
∴பக்ஸ்: 026-2050805

**8. மாவட்ட அலுவலகம் - யாழ்ப்பாணம் மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 0212212663
∴பக்ஸ்: 0212212663

**9. மாவட்ட அலுவலகம் - புத்தளம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
23, ஈபர்ட் சில்வா தோட்டம், கொழும்ப வீதி,
சிலாபம்
தொலைபேசி: 0312222865/0718099899
∴பக்ஸ்: 0322222865

**10. மாவட்ட அலுவலகம் - கம்பஹா மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
இல. 704/9A, 2ஆவது கருணா,
கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
தொலைபேசி: 031-2228606/718-325678
∴பக்ஸ்: 031-2228606

# தலைவரின் செய்தி

இலங்கையின் கடல்சார் பிராந்தியத்தில் இடம்பெறுகின்ற கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பதற்கும், தணிப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் 2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை செயற்படுகின்றது. அந்த நோக்கங்களைச் சாதிப்பதற்காக அவசியமான சட்ட ஏற்பாடுகளைச் செயற்றிறனாகவும், வினைத்திறனாகவும் வகுத்தமைப்பதற்கும், அமுலாக்குவதற்கும் கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தின் பிரிவு 51இன் கீழ் 4 ஒழுங்குவிதிகளை வகுத்தமைத்து அமுலாக்கு வதன் மூலம் 2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையைத் தாபிப்பதில் உத்தேசமான நோக்கங்களைச் சாதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டதிலிருந்து உள்ளக கட்டுப்பாடுகளையும், அறிக்கையிடல் முறைமையியல்களையும் அறிமுகப்படுத்து வதற்கும், அமுல்படுத்துவதற்கும் அவசியமான நடவடிக்கைகள் பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடப்பட்டு நடவடிக்கையினுள் போடப்பட்டுள்ளது. ஆண்டின் போது ருகுணு பல்கலைக்கழகத்தின் கலாநிதி தேர்னி பிரதீப் குமார அமைச்சரவை நிருபம் ஒன்றினால் அதிகார சபையின் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார். புதிய பொது முகாமையாளரின் நியமனத்துடன் அதிகார சபையின் எதிர்காலப் பாதையும், வினைநுட்பமும் அவரது அறிவினதும், திறன் களினதும் மற்றும் தொலைநுட்பத்தினதும் மீது மிகவும் பயனுறுதிவாய்ந்ததாக விளங்குமென நான் எதிர்பார்க்கின்றேன்.

2014ஆம் ஆண்டில் அதிகார சபையின் செயல் திட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகள் வழமைபோல் அமுல்படுத்தப் பட்டன. அதேவேளை திறைசேரி ஏற்பாடுகளின் கீழ் இரு கருத்திட்டங்களை அதிகார சபை ஆரம்பித்து அமுல்படுத்தியது.

அடிதாங்கி நீரினூடாக வந்திறங்கக்கூடிய அந்நியமானதும், ஆக்கிரமிப்பிலானதுமான அங்கி இனங்களை அடையாளம் காண்பதற்கான கருத்திட்டம் 2014ஆம் ஆண்டில் முடிவடைந்தது. கருத்திட்டங்களின் அமுலாக்கத்தில் ஶ்ரீ ஜயவர்தனபுர, ருகுணு, களனி மற்றும் வயம்ப ஆகிய பல்கலைக்கழகங்களிலிருந்து துறை மீதான நிபுணர்கள் பங்கெடுத்தனர். 2014ஆம் ஆண்டில் திருகோணமலை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களில் அளவீட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. தற்போது அளவீட்டின் இறுதி அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. இலங்கையின் துறைமுகங்களில் அந்நிய அங்கிகளும், விரோதத்திலான அங்கிகளும் வந்திறங்கு கின்றனவா என்பதைச் சோதிப்பதற்கு இது இயலச்செய்யும் என்பதுடன், துறைமுகத்துடன் இணைந்து ஒரு முக்கிய தரவுத் தளம் தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பசுமைத் துறைமுகங்கள் கருத்தருவை மேம்படுத்தும் நோக்கத்திற்காக திறைசேரி ஒதுக்கீடுகளின் கீழ் மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகம் மீது நோக்கினைக் கொண்டு மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்துடனான கூட்டுமுயற்சியில் பசுமைத் துறைமுக கருத்திட்டத்தை அதிகார சபை ஆரம்பித்ததுடன் இக் கருத்திட்டம் 2014-2016இல் அமுல்படுத்தப் படும். பசுமை மீன்பிடித் துறைமுகமொன்றாக மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகத்தைக் கட்டுவதை இது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இறுதியாக 2014ஆம் ஆண்டின் போது 2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தின் நோக்கங்களைச் சாதிப்பதில் அவர்களின அயராத ஒத்துழைப்புக்காக பணிப்பாளர் சபைக்கும், பொது முகாமையாளருக்கும் மற்றும் பணியாளருக்கும் எனது நன்றிகளை நீடிக்கின்றேன்.

ரி.என்.விஜேகுணவர்தன
தலைவர்



## தொலைநோக்கு

*"2020ஆம் ஆண்டுக்குள் நிலைத்திருத்தல் தேசிய அபிவிருத்திக்கும், இலங்கை மக்களின் சேமநலனுக்கும் மற்றும் பொருளாதாரத்திற்கும் இலங்கையைச் சுற்றி தீழ்ப்பு அற்ற கடல்சார் சூழலை உருவாக்குதல்"*

## செயற்பணி

*"தற்போதையதும், எதிர்காலத்திற்குமானதுமான சந்ததிகளின் கடல்சார் சுற்றாடலின் நிலைத்திருத்தல் முகாமைத்துவத்திற்கு பயனுறுதிவாய்ந்த ஒழுங்குவிதிகளின் வினைப்படுத்தலினதும், சம்பந்தப்பட்ட சர்வதேச சமவாயங்களினதும் பங்காளரின் ஒருங்கிணைப்பினதும் மற்றும் ஒன்றுதிரட்டலினதும் மற்றும் வேறு மூலவளங்களினதும் அமுலாக்கத்தினதும் ஊடாக இலங்கையின் நீர்ப்பரப்புக்களில் கடல் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், முகாமை செய்வதற்கும் அவசியமான திறன்களுடனும், தகுதியுடனும், தாபனரீதியான கட்டமைப்பினதும் மற்றும் உட்கட்டமைப்பு வரைச்சட்டத்தினதும் முகவராண்மையொன்றாக இருத்தல்."*

# 1.பின்னணி

## 1.1 அறிமுகம்

தீவகமொன்றாக, இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவமான நிலையொன்றில் இலங்கை அமைந்துள்ளது. சர்வதேசச் சட்டங்களின் பிரகாரம், அதன் நிலப்பரப்பின் அளவின் எட்டுத் தடவைகளுக்கு மேலாக பரந்த கடல்சார் பிராந்தியமொன்றில் மூலவளங்களைப் பெறுவதற்கு இலங்கை உரித்தினைக் கொண்டுள்ளது. எமது நாட்டுக்குச் சொந்தமான சமுத்திரப் பிராந்தியத்தின் வழியே கிழக்கையும், மேற்கையும் சர்வதேச கப்பற் துறை வழிகள் இணைக்கின்றன. இலங்கைக்குச் சொந்தமான ஆள்புல நீர்கள் பெருமளவு மூலவளங்களுடன் வளமானது என்பதுடன், இவை கப்பல்களின் ஓட்டத்தினதும், நிலத்தில் மனித செயற்பாடுகளினதும் காரணமாக படிப்படியாக தீழ்ப்படைகின்றது.

இதன் பிரகாரம், எமது சமுத்திர மூலவளங்களை தீழ்ப்பின்றி பராமரிக்குமுகமாக 1981இன் இல.59 கடல்சார் தீழ்ப்புத் தடுப்பு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகார சபை அமைக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்திற்கு பிரயோகிக்கத்தக்க கடல்சார் தீழ்ப்பு மீதான சர்வதேச சமவாயத்தை அமுல்படுத் ˙காகவும், கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பதற்காகவும், தணிப்பதையும் அத்துடன் கட்டுப்படுத்து வதையும் செயற்படுவதற்காகவும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையில் உடமையாக்கப்பட்டுள்ள சட்ட அதிகாரங்கைள பலப்படுத்துவதற்காக 2008இன் இல.35 புதிய கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டதுடன், இது 2009 ஜனவரி 01 அன்றிலிருந்து செயற்படும் விதத்தில் அமுலாக்கப்பட்டது. இச் சட்டத்தின் பிரகாரம் புதிய அதிகாரச்சட்டத்தினால் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையாக அதிகார சபையின் பெயர் மாற்றப்பட்டது.

எதிர்காலத்திற்கு மகிந்த சிந்தனை தொலைநோக்கின் பிரகாரம், கடற்படை முனையொன்றாக இலங்கையை அபிவிருத்தி செய்தல் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். இந்த நோக்கத்தின் பிரசன்னத்தில் புதிய துறைமுகங்களின் நிருமாணமும், நடைமுறை யிலான துறைமுகங்களின் மேம்படுத்தலும் செய்யப்பட்டன. மேலதிகமாக, கடல்சார் மூலவளங்களைப் பெறுவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் வகுத்தமைக்கப்படுகின்றன. எனவே, அபிவிருத்தி நடவடிக்கை ஊடாக இடம்பெறுகின்ற தீழ்ப்பினைக் குறைந்த பட்சமாக்குவதற்கும், இந்த கைத்தொழில்களின் நிலைத்திருக்கும்தன்மையை பராமரிப்பதற்கும் இந்த அதிகார சபையின் பங்கு மீதான பங்களிப்பு அவசியமானதாகும்.

இதன் பிரகாரம், கடல்சார் இயற்கை மூலவளங்களின் தீழ்ப்பினை குறைந்தபட்ச மாக்குவதற்கும், தணிப்பதற்கும் அத்துடன் முகாமைத்துவம் செய்வதற்கும் நிறுவனம் குறித்தொதுக்கப்பட்டுள்ளதனால், பெருமளவு நிகழ்ச்சித்திட்டங்களை இந்த அதிகார சபை அமுலாக்கியது.

## 1.2 அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

(அ) கடல்சார் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தினதும், அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளை பயனுறுதி யாகவும், திறமையாகவும் நிருவகித்தலும், நடைமுறைப்படுத்தலும்.

(ஆ) இலங்கையின் ஆள்புல நீர்ப் பரப்புக் களில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயங்களில் அதன் கரை மீது கப்பல்சார்ந்த செயற்பாட்டிலும், கடல்சார் கரையோரம் தொடர்பான நடவடிக்கையிலும் இருந்து எழும் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், குறைப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், முகாமை செய்வதற்கு மான செயற்திட்டமொன்றை வகுத்தலும், நிறைவேற்றுதலும்.

(இ) இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரை முனங்கிலும் அல்லது இலங்கையின் கரையோர வலயத்திலும் ஏதேனும் கப்பல் சார்ந்த செயற்பாட்டினின்று அல்லது கடல்சார் கரைசார்ந்த கடலோரம் தொடர்பான செயற்பாட்டினின்று எழும் தீழ்ப்பைத் தடைசெய்யும், குறைக்கும், கட்டுப் படுத்தும் அத்துடன் முகாமை செய்யும் நோக்கத்திற்காக அரசாங்க மற்றும் தனியார் துறை திணைக்களங்களுடனும் முகவராண்மை

களுடனும் நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

(ஈ) இலங்கையின் கடற்கரையையும் மற்றும் அதன் கரையோர வலயத்தையும், அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப்படுத்தப்படவுள்ள இலங்கையின் அல்லது ஏதேனும் வேறு கரைசார்ந்த வலயத்தின் ஆள்புல நீர்ப்பரப்புக்களையும் நிருவகிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், பேணிக் காப்பதற்குமான நடவடிக்கைகளை எடுத்தல்.

(உ) ஏதேனும் எண்ணெய்க்கு தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்திற்கு அல்லது வேறு ஏதேனும் தீழ்ப்பாக்கிக்கு போதியளவிலும், பயனுறுதியுடையதுமான ஏற்பு வசதிகளை வழங்குதல்.

(ஊ) இலங்கை அரசாங்கம் ஏற்றங் கீகரித்துள்ள, ஏற்றுக்கொண்டுள்ள, இணங்கி யுள்ள அல்லது அங்கீகரித்துள்ள அல்லது ஏற்றங்கீகரிக்கக்கூடிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய, இணங்கக்கூடிய அல்லது அங்கீகரிக்கக்கூடிய கடல்சார் தீழ்ப்பைக் கையாளும் எல்லா சர்வதேச சமவாயங்களையும், இயைபான பின்னேடுகளையும் கடைப்பிடிப்பதனை விதந்துரைத்தல்.

(எ) தேசிய எண்ணெய் தீழ்ப்பு எதிர்பாரா நிகழ்வுத் திட்டத்தை வகுத்தமைத்தலும், நடைமுறைப்படுத்தலும்.

(ஏ) பெற்றோலியம் அல்லது அது தொடர் பான செயற்பாடுகள் உட்பட இயற்கை வளங்களின் நுண்ணாய்வை மேற் கொள்ளும் அல்லது அதில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர் களினதும், சேவைத் துணை ஒப்பந்தக்காரர் களினதும் எவரேனும் ஆளினதும் நடத்தையை மேற்பார்வை செய்தலும், ஒழுங்குபடுத்துதலும், கண்காணித்தலும்.

(ஐ) கடல்சார் சூழலைப் பேணிக் காக்கும் அவசியம் பற்றி சமுதாயத்தின் வெவ்வேறு குழுக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கு தல்.

(ஒ) மேற்கூறப்பட்ட பணிகள் எல்லா வற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் மேற்கொள்ளுதல்.

**அதிகார சபையின் அதிகாரங்கள்**

(அ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புக்கள் அல்லது கடல்சார்ந்த வலயங்கள் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப்படுத்தப்படவுள்ள ஏதாவது வேறு கடல்சார்ந்த வலயத்தை ஏதாவது கப்பல் அடிப்படையிலான அல்லது கடல் அடிப்பபை டயிலான கடல்சார்ந்த தொடர்பிலான நடவடிக்கையினால் பயனுறுதியுடன் பாதுகாத்தலும், பேணிக் காப்பாற்றுதலும்.

(ஆ) ஏதாவது கப்பல் அடிப்படையிலான நடவடிக்கைகளிலிருந்து அல்லது கரை அடிப்படையிலான நடவடிக்கையிலிருந்து எழுகின்ற ஏதாவது தீழ்ப்பு தொடர்பில் ஆய்வு களையும், விசாரணைகளையும் நடத்துதலும், சட்ட நடவடிக்கையை ஆரம்பித்தலும்.

(இ) தீழ்ப்பின் தடுத்தல் நோக்கத்திற்காக இலங்கையின் அல்லது அதன் கடற்கரையின் அல்லது கரையோர வலயத்தின் ஆள்புல நீர்களில் அல்லது ஏதாவது வேறு கடல்சார் வலயத்தில் மேற்கொள்ளப்படும் எண்ணெயின் சகல கடல் போக்குவரத்தையும், எண்ணெய் ஏற்றிஇறக்குதல் செயற்பாடுகளையும் கட்டுப் படுத்தல்.

(ஈ) ஏதேனும் அசையக்கூடிய அல்லது அசையாத ஆதனத்தைக் கையகப்படுத்தல், வைத்திருத்தல், எடுத்தல் அல்லது குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு வழங்குதல், அடமானம் செய்தல், வாக்களித்தல், விற்றல் அல்லது வேறு முறையில் விற்றொழித்தல்;

(உ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியப் பட்டவாறு அத்தகைய அலுவலர்களையும், சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்தல்;

(ஊ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறு உள்ள சகல அத்தகைய ஒப்பந்தங்களை ஏதேனும் அலுவலரினால் அல்லது அதன் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட முகவரினால் நேரடியாக பதிவுசெய்தலும், நிறைவேற்றுதலும்;

(எ) சட்டத்தின் கீழ் அதிகார சபை மீது சுமத்தப்பட்டுள்ள சகல அல்லது ஏதேனும் அதிகாரங்களைச் சுமத்தும் நோக்கத்திற்காக

பெயரினால் அல்லது பதவியினால் ஏதேனும் நபரை நியமித்தல்;

(ஏ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் அல்லது நிதிசார் நிறுவனத்தில் கணக்குகளை ஆரம்பித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்;

(ஐ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமான அத்தகைய பணத்தின் தொகைகளை இரவல் பெறுதல்;

(ஒ) இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உள்ள மூலங்களிலிருந்து அசையக்கூடியதும், அசையாததுமான ஆதனங்களின் மானியங் களையும், நன்கொடைகளையும் மற்றும் சாசனங்களையும் ஏற்றுக்கொள்ளுதலும், பெறுதலும், அதிகார சபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பயன்படுத்து தலும்;

(ஓ) அதிகார சபையின் அலுவல்களின் முகாமைத்துவம் தொடர்பில் விதிகளைச் செய்தல்;

(ஔ) அதிகார சபையினால் வழங்கப்படும் ஏதேனும் சேவைகளுக்கு ஏதேனும் நபரிடமிருந்து அல்லது நபர்களின் உறுப்பிலிருந்து கட்டணங்களைச் சுமத்துதல்;

(க) அதிகார சபையினால் வழங்கப்படும் சேவைகளுக்காக இலங்கையின் துறை முகங்களில் வந்திறங்கும் சகல கப்பல்கள் தொடர்பில் கட்டணங்களை அல்லது செலவு களை அறவிடுதல்;

(கா) அதிகார சபையின் பணிகளை அல்லது இச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரங்களுக்கு இடைநேருகின்ற அல்லது அதிகார சபை மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது குறித்தொதுக்கப்பட்டுள்ள அல்லது அதிகார சபைக்கு தோதாக நிறைவேற்று வதற்கு அவசியமான சகல அத்தகைய வேறு செயற்பாடுகளை அல்லது விடயங்களைச் செய்தல்.

# 2. நிருவாக அறிக்கை

2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்பு சட்டத்தின் நோக்கங்களை குறிக்கோளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 2012-2016 கூட்டாண்மைத் திட்டத்தினதும் மற்றும் வருடாந்த செயல் திட்டத்தினதும் அமுலாக்கத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நோக்கங்களைச் சாதிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாட்டிலான செயற்பாடுகளைப் பணிப்பாளர் சபை வழிகாட்டியதுடன், கண்காணிப்பையும் மேற்கொண்டது. நல்லாட்சி கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் பங்காளர்களுக்கு நீடித்து நிற்கும் நன்மைகள் கொண்டு வரப்பட முடியும் எனவும், அதிகார சபை சரிவர நிருவகிக்கப்பட முடியும் எனவும் பணிப்பாளர் சபை மேலும் நம்புகின்றது. கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை பத்து (10) உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

கூட்டாண்மை ஆட்சியின் தத்துவங்கள் மீதான அடிப்படையில் நிருவாக அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர்களினால் வெளியிடப் பட்ட நல்லாட்சிக்கான வழிகாட்டலின் பிரகாரமும், திறைசேரியினாலும் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட அதிகார சபைகளினாலும் வழங்கப்பட்ட வேறு நிருவாக வழிகாட்டல்களின் கோட்பாடு களினதும், தேவைப்பாடுகளினதும் பிரகார மும் மதிப்புரையின் கீழுள்ள ஆண்டுக்கான செயற்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பொறுப்பானதும், ஒளிவுமறைவற்றதுமான தன்மையொன்றைப் பின்பற்றி கூட்டாண்மை ஆட்சியின் கோட்பாடுகளை உறுதிப்படுத்து வதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை மேம்படுத்துவதை நோக்கி நாளாந்தம் பணிப்பாளர் சபையின் கவனம் நோக்கினைக் கொண்டிருந்தது. பணிப்பாளர் சபையையும், கணக்காய்வு மற்றும் அதன் உபகுழுவான முகாமைத்துவ குழு வினையும், மற்றும் தகைமைவாய்ந்த சிரேஷ்ட முகாமைத்துவக் குழாமையும் உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு கொண்டுள்ளது. மீளமைப்பு நடைமுறை களினதும், முறைமையியல்களினதும் ஊடாக உள்ளகக் கட்டுப்பாட்டு அலகுகள் பயனுறுதிவாய்ந்ததாக பயன்படுத்தும் தன்மையை பின்வரும் நிருவாகக் கட்டமைப்பு காட்டுகின்றது:




### 2.1 பணிப்பாளர் சபையின் பொறுப்பும், வகிபங்கும்

கடல்சார் சூழல் பாதுகாப்புச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களைச் சாதிக்கும் நோக்கத்திற்காக கொள்கையை வகுப்பதிலும், மதிப்பாய்வதிலும் அது கொண்டுள்ள ஆற்றலளவுகளையும், தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தையும் பயன்படுத்துவது பணிப்பாளர் சபையின் பிரதான பொறுப்புக்களில் ஒன்றாகும். நீண்ட கால நோக்கங்களைச் சாதிப்பதற்காக மூலோபாயங்களை அமுல்படுத்துவதே பணிப்பாளர் சபையின் வகிபங்காகும். இப்பணிகளை நிறைவேற்றுவதில் அவசியமான போது துறையில் உள்ள நிபுணர்களிடமிருந்து தொழில்நுட்ப மற்றும் உசாவுகை சேவைகளை பெற வேண்டியிருந்தது.

இணைந்த திட்டம், செயல் திட்டம் மற்றும் வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு ஆகிய வற்றினால் எதிர்பார்க்கப்படும் இலக்கு களைச் சாதிப்பதற்காக நல்லாட்சிக் கோட்பாடுகளைச் செயற்படுத்துவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

முகாமைத்துவ மற்றும் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் பயனுறுதிவாய்ந்ததும், செயற்றிறனானதுமான செயல்நிறை வேற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக நுண்ணாய்வையும், கண்காணித்தலையும் சுதந்திரமாக நிறைவேற்றுவதற்காக உப

குழுவொன்றாக கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவைப் பணிப்பாளர் சபை நியமித்துள்ளது. இக் குழு பிரதானமாக நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் பொறுப்புக்களையும், வகிபங்குகளையும் இந்த அறிக்கை கொண்டுள்ளது.

## 2.2 பணிப்பாளர் சபையின் அடக்கம்

31.12.2014இல் உள்ளவாறு 10 உறுப்பினர்களைப் பணிப்பாளர் சபை கொண்டிருந்தது. அவர்களில் எட்டுப் பேர் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களாக உள்ள அதேவேளை தலைவரும், பொது முகாமையாளரும் நிறைவேற்றுப் பணிப்பாளர்களாகப் பணியாற்றுகின்றனர்.




உருபு 01

தலைவராக திரு.ரி.என்.விஜயகுணவர்தன பணியாற்றியதுடன், பணிப்பாளர் சபையின் அலுவல்களைத் தோதாக நடத்துவதற்கும், தடங்கலற்ற செயற்பாட்டுக்கும் வசதிகளையும், வழிகாட்டல்களையும் அவர் வழங்கினார்.

2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் நிறைவேற்றுத் தரத்திலானதும், நிறைவேற்று தரம் சாராததுமான அடக்கம் வைக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபையில் சேவையாற்றும் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களில் ஆறு பேர் நான்கு முக்கிய அமைச்சுக்களையும், கடற்படைத் தளபதியையும் மற்றும் வணிக கப்பற்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இதனால் அதிகார சபையின் விரிவெல்லைக்கு தொடர்பான சகல விடயத் துறைகளை உள்ளடக்குவதற்காக பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்கள் அந்த நிறுவனங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பைக் கொண்டு வருவதில் பாரிய வகிபங்கொன்றை நிறைவேற்றுகின்றனர்.

## 2.3 பணிப்பாளர் சபையின் நியமனங்களும், இளைப்பாறுதல்களும்

மதிப்பாய்வின் கீழுள்ள 2014 நிதிசார் ஆண்டின் போது பணிப்பாளர் சபைக்கு இரு நியமனங்கள் செய்யப்பட்ட அதேவேளை ஒரு இளைப்பாறுதல் இடம்பெற்றது.

## 2.4 பணிப்பாளர் சபையின் கூட்டங்கள்

2014ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் பதினான்கு (14) கூட்டங்கள் நடத்தப்பட்டன. பயனுறுதிவாய்ந்ததும், செயற்றிறனானதுமான தீர்மானங்களை எடுப்பதற்கு அவசியமான சபை அறிக்கைகளையும், மற்றும் வேறு தகவல்களையும் நேரகாலத்திற்கு பணிப்பாளர் சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்ட்டன.

## 2.5 பணிப்பாளர் சபையின் செயலாளர்

பணிப்பாளர் சபையின் செயலாளராக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் முகாமையாளர் (சட்டம்) பணியாற்றுகின்றார். பணிப்பாளர் சபையின் பதிவேடுகளை வைத்திருப்பதற்கு மேலதிகமாக, நல்லாட்சியின் கோட்பாடுகளையும், சட்டத் தேவைப்பாடுகளையும் செம்மையாகப் பின்பற்றி நேர காலத்திற்கு அவசியமான தகவலைப் பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளர் சபையின் செயலாளர் வழங்கினார்.

# 3. கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

மூன்று நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களைக் கணக்காய்வு, முகாமைத்துவக் குழு கொண்டுள்ளது. திறைசேரியின் பிரதிநிதி திரு.எம்.எஸ்.பி. ஜயதிலக்க அதன் தலைவராக விளங்கியதுடன், சூழல் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு.ஆர்.ஆர்.எ.ஆர். ரூபசிங்க மற்றும் பணிப்பாளர் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரான திரு.ஜே.எ.எ. எஸ். ரணசிங்க குழுவின் உறுப்பினர்களாக விளங்கினார்கள். மேலதிகமாக, சூழல் அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள கணக்காய்வு மேலாளரும், சூழல் அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய் வாளரும் பிரதான அவதானிப்பாளர்களாக கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் கூட்டங்களில் பங்கெடுத்தனர். கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவினால் வரவழைக்கப் பட்ட போது தெளிவுபடுத்தலை வழங்கு வதற்காக அவசியப்பட்ட போதெல்லாம் குழுவின் முன் பொது முகாமையாளரும், கணக்காளரும் அத்துடன் வேறு சம்பந்தப்பட்ட பதவிநிலைகளிலான அலுவலர்களும் ஆஜராகினர்.

உள்ளக கணக்காய்வு பிரிவினால் உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிற்பாடு, நிதி, நிருவாக மற்றும் சட்ட பிரிவுகளை உள்ளடக்கி ஆண்டினுள் அமுல்படுத்தப் படுவதற்கு கணக்காய்வின் நோக்கெல்லை யில் உள்ள தொழிற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலதிகமாக, நிதிசார் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதில் மதிப்பாய்வுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள தொழிற்பாடுகளையும், நிருவாகத்தையும், நிதியையும் அத்துடன் குறைபாடுகளையும் பொறுத்தளவில் நடைமுறையிலான குறைபாடுகளைக் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் திணைக்களம் உட்படுத்தியிருந்தது.

முகாமைத்துவத்துடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையை கலந்துரையாடு வதன் மூலம் அவசியமான சீராக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கைகள் பின்பற்றப் பட்டன. அதிகார சபையின் உள்ளகச் சுற்று நிருபங்கள், நிதிசார் ஒழுங்குவிதிகள், தாபன சட்டக்கோவை மற்றும் வேறு ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் பிரகாரம் அதிகார சபையின் அலுவல்கள் நடத்தப்படுகின்றன என்ற உறுதிப்பாட்டைப் பெறுவதற்காக கணக்காய்வு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல், அதிகார சபையின் சொத்துக்களைப் பேணுதல் அத்துடன் பராமரித்தல் மற்றும் அதிகார சபையின் திரவநிலையைப் பராமரித்தல் ஆகியன உட்பட சகல நிதி, நிருவாக மற்றும் தொழிற்பாட்டு செயற்பாடுகள் இம் முயற்சியில் கணக்காய்வுக்கு உட்படுத்தப் பட்டன. கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட நிதிசார் முன்னேற்ற அறிக்கைகளை கணக்காய்வு, முகாமைத்துவக் குழு பரிசோதித்ததுடன், இது தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பில் தலைவருக்கும், பொது முகாமை யாளருக்கும் பரிந்துரைகளை சமர்ப்பித்தது.

அதன் கூட்டத்தில் தமது அவதானிப்பு களையும், முடிவுகளையும் மற்றும் பரிந்துரைகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் திணைக்களத்துடன் கணக்காய்வு, முகாமைத்துவக் குழு கலந்துரையாடியது. மேலதிகமாக, உள்ளக கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப் படுத்தப்பட்ட உண்மைகளையும், மற்றும் கணக்காய்வு முறைமையியல்களின் செயற்றிறனையும் கணக்காய்வு, முகாமை த்துவக் குழு மதிப்பாய்ந்ததுடன், குறைபாடு களை குறைந்தபட்சமாக்குவதற்கு அவசிய மான அறிவுறுத்தல்களையும், வழிகாட்டல் களையும் வழங்கியது. ஆண்டின் போது நான்கு தடவைகள் கூட்டத்தைக் கணக்காய்வு, முகாமைத்துவக் குழு நடத்தியது.

**2014இல் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் கூட்டங்கள் மீதான பதிவுகள்**

| | பெயர் | பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளபப்ட்ட பதவிநிலை | சபைக் கூட்டங் களின் எண். |
|---|---|---|---|
| 01 | திரு.ரி.என்.விஜேகுணவர்தன | தலைவர் | - |
| 02 | திரு.ஆர்.எ.ஆர்.ஆர்.ரூபசிங்க | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் | 8/14 |
| 03 | திருமதி எஸ்.என். மாயாதுன்னே பண்டார | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் | 3/14 |
| 04 | திரு.பி. எஸ்.எம்.ஜயதிலக்க | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் | 14/14 |
| 05 | திரு.எச்.எம்.பீ.சி.ஹேரத் | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் | 7/14 |
| 06 | திரு.எ.டபிள்யு.செனிவிரத்ன | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் | 5/14 |
| 07 | கொமடோர் என்.பி.ஆட்டியகல (19.05.2014இல் ராஜினா செய்தார்) | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் | 2/14 |
| | கொமடோர் என்.பி. விக்ரமசிங்க (19.05.2014இல் நியமிக்கப்பட்டார்) | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் | 7/14 |
| 09 | திரு.ஜே.எ.எ.எஸ்.ரணசிங்க | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் (அமைச்சினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) | 14/14 |
| 10 | திரு.மகேஷ் கட்டுலந்த | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் அமைச்சினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) | 2/14 |
| 11 | செல்வி எ.காரியவாசம் (04.08.2014 வரை) | பொது முகாமையாளர் (பதில்) நிறைவேற்றுப் பணிப்பாளர் | - |
| 12 | கலாநிதி பி.பீ.தேர்னி பிரதீப் (04.08.2014இல் நியமிக்கப்பட்டார்) | பொது முகாமையாளர், நிறைவேற்றுப் பணிப்பாளர் | - |
| 13 | திரு.ஜி.எஸ்.எஸ்.ஜி.பெரேரா | அவதானிப்பாளர் (கணக்காய்வு, முகாமைத்துவக் குழு) | 0 |
| 14 | திரு.எல்.டி.என்.குமாரசிறி | அவதானிப்பாளர் (கணக்காய்வு, முகாமைத்துவக் குழு) | 0 |

**2014இல் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் கணக்காய்வு, முகாமைத்துவ குழுவின் கூட்டங்கள் மீதான பதிவுகள்**

| | பெயர் | பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளபப்ட்ட பதவிநிலை | கணக்காய்வு, முகாமைத்துவ குழுவின் கூட்டங்களின் எண். |
|---|---|---|---|
| 01 | திரு.பி. எஸ்.எம்.ஜயதிலக்க | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் | 3/4 |
| 02 | திரு.ஆர்.எ.ஆர்.ஆர்.ரூபசிங்க | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் | 4/4 |
| 03 | திரு.ஜே.எ.எ.எஸ்.ரணசிங்க | நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் (அமைச்சினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) | 4/4 |
| 04 | திரு.ஜி.எஸ்.எஸ்.ஜி.பெரேரா | அவதானிப்பாளர் (கணக்காய்வு, முகாமைத்துவக் குழு) | 4/4 |
| 05 | திரு.எல்.டி.என்.குமாரசிறி | அவதானிப்பாளர் (கணக்காய்வு, முகாமைத்துவக் குழு) | ¾ |

# 4. தொழிற்பாடுகளின் மதிப்பாய்வு

## 1. தேசிய எண்ணெய் சிந்துதல் திட்டத்தின் அமுலாக்கம்

ஒரு தொகையிலான வர்த்தக மற்றும் மீன்பிடி துறைமுகங்களின் அதிகரிப்பினதும், துறைமுகங்களுடன் இணைந்த அபிவிருத்தி செயற்பாடுகளினதும் மற்றும் இலங்கையின் துறைமுகங்களில் வந்திறங்கும் கப்பலின் எண்ணிக்கையின் அதிகரிப்பினதும் காரணமாக கப்பல் விபத்துக்களின் காரணமாக கடல்சார் சூழலினுள் எண்ணெய் ஊடுருவலின் அபாயம் அதிகரிக்கின்றது.

சடுதியான எண்ணெய் சிந்துதலினால் விளைவிக்கப்படுகின்ற கெடுதலைத் தணிப்பதற்கும், குறைந்தபட்சமாக்குவதற்கும் எண்ணெய் சிந்துதல்களைக் கட்டுப் படுத்துவதற்கு தேசிய எண்ணெய் சிந்துதல் திட்டத்தை அமுலாக்குவது அவசியமான தாகும்.

எனவே, திட்டத்தை அமுலாக்குவதில் சம்பந்தப்பட்டுள்ள சகல நிறுவனங் களையும், அலுவலர்களையும் அறிவூட்டுவதும், திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுப்பதும் முக்கிய மானதாகும். இந்நோக்கத்திற்காக 2014இல் அதிகார சபையினால் பின்வரும் செயற்பாடுகள் நடத்தப்பட்டன:

- நிகழ்வு முகாமைத்துவக் குழாம் கூட்டங்களை நடாத்துதல்

சடுதியான எண்ணெய் சிந்துதலில் அமுல்படுத்துவதற்கு அவசியமான நிகழ்வு செயல் திட்டத்தை வகுத்தமைக்கும் ஆரம்பநிலையிலான பொறுப்பு இந்த குழாமுக்கு குறித்தொதுக்கப்படும் என்பதுடன், அவர்களுக்கு குறித்தொதுக்கப் பட்டுள்ள பொறுப்பின் பிரகாரம் அவர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை அவர்களுக்கு அறிவிப்பது அவசிய மானதாகும். ஆண்டின் போது ஐந்து சுற்றுக்களைக் கொண்ட கூட்டங்களை நடத்துவதன் மூலம் அவர்கள் அறிவூட்டப்பட்டனர். அதேவேளை, அந்த அலுவலர்கள் சார்ந்த நிறுவனங்களின் பொறுப்பும் கலந்துரையாடலுக்கு உட்பட்டிருந்தது.

- எண்ணெய் சிந்துதலில் முதலாவது பதிலிறுப்பாளர்களைப் பயிற்றுவிப்ப தற்கான மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

எண்ணெய் சிந்துதலின் தாக்கம் மீது முதலாவது பதிலிறுப்பாளர்களை அறிவூட்டுவதற்கும், எண்ணெய் சிந்துதலை கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்பங் களையும் மற்றும் எண்ணெய் சிந்துதலுக்கு பதிலிறுப்பதில் அவர்களை தயார்படுத்து முகமாக எண்ணெய் சிந்துதலைக் கட்டுப்படுத்துவதில் பயன்படுத்துவதற்கான உபகரணங்களை எவ்வாறு செயற் படுத்துவது என்பன மீது அறிவூட்டுவதற்காக மூன்று நாள் செயலமர்வு நடத்தப்பட்டது.

- தென் ஆசியப் பிராந்தியத்தில் எண்ணெய் சிந்துதலுக்கு பதிலிறுப்ப தற்காக செயல் திட்டத்தின் சம்பந்தம்

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய தென் ஆசிய நாடுகளைப் பாதிக்கும் எண்ணெய் சிந்துதலுக்கு பதிலிறுப்பதற்காக ஒன்றுசேர திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், எண்ணெய் சிந்துதலில் நடவடிக்கையை எடுக்குமுகமாக புரிந்துணர்வு ஒப்பந்த மொன்று கைச்சாத்திடப்படவுள்ளது. இலங்கையின் சார்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்காக மந்திரி களின் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது. அதில் சூழல் அமைச்சு கைச்சாத்திட்டவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை செயற்பட வேண்டும்.

தென் ஆசியப் பிராந்தியத்தில் மேற்படி திட்டத்தை நிறைவேற்றுவதற்காக கருத்திட்ட மொன்றை சர்வதேச கடல்பற்று தாபனம் அமுலாக்குகின்றது. இக் கருத்திட்டத்தின் கீழ் தென் ஆசிய பிராந்திய சூழல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் சேர்ந்து சடுதியான எண்ணெய் சிந்துதலில் செயல் திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் இரு நாள் செயலமர்வொன்று நடத்தப்பட்டது. இக் கருத்திட்டத்தின் போது தென் ஆசிய திட்டத்தை திருத்தியமைப்பதற்கும், தேசிய எண்ணெய் சிந்துதலுக்கான செயல்

திட்டமொன்றைத் திருத்துவதற்கும் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

- மாகாண மட்டத்தில் எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்ட மொன்றின் அறிமுகம்

எண்ணெய் சிந்துதலில் அமுல்படுத்து வதற்காக மாகாண மட்டத் திட்டமொன்றை வகுத்தமைப்பதற்கு அவசியமான பணியை ஆரம்பிப்பதற்காக இரு நாள் செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

- களுத்துறையில் கலிடோ கரையோர வலயத்தின் தீழ்ப்பு

கலிடோ கடல் நெடுகிலும் எண்ணெயினால் விளைவிக்கப்பட்ட தீழ்ப்பின் சம்பவமொன்று 01.02.2004 அன்று முறையிடப்பட்டதுடன், சம்பவத்தின் காரணமாக அண்ணளவாக 2 கி.மீ. கொண்ட பகுதியொன்று தீழ்ப்படைந்திருந்தது. கரையோர வலயம் மீது சிந்தியிருந்த எண்ணெயை அப்புறப்படு த்துவதற்கும் அத்துடன் கடலை சுத்தப்படுத்துவதற்கும் கரையோரப் பேணல் திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர் களுடன் சேர்ந்து எமது அதிகார சபையின் அலுவலர்கள் மேற்கொண்டனர். எண்ணெய் சிந்துதலின் மூலம் கண்டறியப்பட்டதுடன், அதற்குப் பொறுப்பான நிறுவனத்திற்கு எதிராகச் சட்ட நடவடிக்கையை தாக்கல் செய்வதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- கடல்சார் தீழ்ப்பின் தடுப்பிற்கான சர்வதேச ஒப்பந்தத்திற்கான கையொப்பமிடும் நாடாக விளங்குதல்

இலங்கை மீது சூழ்நிலைப் பகுப்பாய்வு அறிக்கையொன்றை வரைவதற்கும், கடல்சார் தீழ்ப்பின் தடுப்புக்கான தீர்மானம் 1973/78 மீதான அடிப்படையில் கப்பல் களினால் விளைவிக்கப்படும் கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பதற்கான தாபனமாக விளங்குகின்ற 1997 OPRC HNS Protocol தரப்பொன்றாக இலங்கையைச் செய்யும் நோக்கத்திற்காகத் தரவுகளை நிர்ணயிப்ப தற்காக அதை முடிவுபடுத்துமுகமாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரை யாடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

- அடிதாங்கி நீரின் ஊடாக வந்திறங்கும் ஊடுருவுகின்ற அங்கிகளின் பெருக்கத்தினை சமாளிப்பதற்கான கருத்திட்டம்

இலங்கையின் வர்த்தகத் துறைமுகங்களின் சூழ்நிலை மீது ஆரம்ப ஆராய்ச்சியை மேற்கொள்வதே இக் கருத்திட்டத்தின் கீழான செயற்பாடுகளில் ஒன்றாகும் என்பதுடன், 2014இன் போது திருகோணமலை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்கள் மீது அளவீட்டுச் செயற்பாடுகள் முடிக்கப்பட்டன.

அதேநேரம், ICTAஉடனான கூட்டு முயற்சியுடன் இலங்கையில் வந்திறங்கும் கப்பல்களினால் அடிதாங்கி நீரினை ஒழித்தல் மீது அறிக்கைகளைப் பெறுவதற்காக அடிதாங்கி நீரின் ஒழிப்பு மீதான ஒன்லைன் அறிவித்தலுக்கான முறைமையியல் ஒன்று உருவாக்கப்பட்டது.

- பசுமை மீன்பிடி துறைமுகக் கருத் திட்டம்

மீன்பிடி துறைமுகங்களின் செயற்பாடுகளின் காரணமாக இடம்பெறுகின்ற கடல்சார் தீழ்ப்பைத் தடுப்பதற்காகவும் அத்துடன் மீன்பிடித் துறைமுகங்களின் நிலைமையை மேம்படுத்துவதற்காகவும் முன்னோடி கருத்திட்டமொன்றாக மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தை மையமாகக் கொண்டு இக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இக் கருத்திட்டத்தின் கீழான பிரதான செயற்பாடுகள் வருமாறு: நார்இழை-கண்ணாடி, பொலித்தீன், மற்றும் றெஜிபோர்ம் போன்ற அதிகளவில் மீன்பிடி துறைமுகங்களில் சேருகின்ற திண்மக் கழிவுகளைச் சரியாக சேகரிப்பதுடன், ஒழித்தல்; மீன்கள் விற்கப்படும் இடங்களில் கழிவுகளைச் சரியாக சேகரிப்பதுடன், ஒழித்தல்; மற்றும் கழிவு நீரின் சரியான சேகரிப்புக்கும், ஒழிப்புக்கும் சுத்திகரிப்பு முறைமையொன்றைத் தாபித்தல்.

மீன்பிடித் துறைமுகத்தினுள் வருகின்ற மீன் விற்பனை பகுதியில் ஒன்றுதிரளும் கழிவின் தடுப்புக்கானதும், அத்தகைய சேகரிப்புக் கானதுமான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014இல் ஒரு புதிய மீன் விற்பனைப் பகுதி

தாபிக்கப்பட்டதுடன், கழிவு சேகரிப்பு முறைமையொன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

- கொட்டுதல் அனுமதிச்சீட்டுக்களை வழங்குதல்

அதிகார சபையினால் வரையப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள உத்தரவுப் பத்திரமொன்றுடன் மட்டுமே கடலில் கழிவைக் கொட்டுதல் மேற்கொள்ளப்பட முடியும். அதேநேரம் கடலில் கழிவை ஒழித்தல் ஒழுங்குவிதிகளின் நிபந்தனைகளின் பிரகாரம் மட்டுமே செய்யப்பட வேண்டும். இது கடலுக்கு விடுவிக்கப்படும் கெடுதலின் தொகையைக் குறைந்த பட்சமாக்கும் என்பதுடன், கழிவைக் கொட்டுவதன் மூலம் விளைகின்ற கடல்சார் சூழலினதும் அத்துடன் சமுத்திரம் அடிப்படையிலான கைத்தொழில்களினதும் மீதான தாக்கங்களைக் குறைந்த பட்சமாக்கும்.

**கப்பல்களில் தோற்றுவிக்கப்படும் கழிவுக்கான உபசரணை வசதிகளை வழங்குதல்**

இச் செயற்பாடுகளின் கீழ் கப்பல்களில் தோற்றுவிக்கப்படும் கழிவைத் தோதாக ஒழிப்பதற்காக புதிய நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இணையதள வசதிகளைப் பயன்படுத்தி முறைமையானரீதியில் கழிவு அகற்றுதல் சேவையை மேற்கொள்வதற்கு நடவடிக்கைககள் எடுக்கப்பட்டன. எனினும், 2014ஆம் ஆண்டில் புதிய நடவடிக்கைகளையும், சேவைகளையும் ஏற்றுக் கொள்வதில் எழுந்துள்ள சில பிரச்சனைக்குரிய சூழ்நிலைகளை வெற்றி கொள்வதற்காக சேவை வழங்குனர்களிடமிருந்து கிடைத்த வேண்டுகோள்களை கரிசனைக்கெடுத்து, பெருமளவு சந்தர்ப்பங்களில் புதிய முறைமையியலின் அமுலாக்கம் பின்போடப்பட்டிருந்தது.

2014க்காக பின்வரும் 27 சேவை வழங்குனர் தாபனங்கள் பதிவு செய்யப்பட்டன.

1. ஹொால்சிம் (லங்கா) லிமிற்றெற்
2. ஷானிகா மரைன் கொம்பனி
3. ஜயா மரைன் கொம்பனி
4. ஜி.எம்.லைன்
5. விஸ்மித்த மரைன் என்டர்பிறைசஸ்
6. ப்ரபால ரேடர்ஸ் மரைன் சேர்விஸ்
7. எஸ்.எச்.வில்சன் அன்ட் கொம்பனி
8. மரியா சிப்பிங் சேர்விஸ்
9. ஓசன் மரைன் சேர்விஸ்
10. என்.ஜி.என்.ரஞ்ஜித் மரைன் சேர்விஸ்
11. நியூ கொழும்பு ஹார்பர் சப்ளையர்
12. மல்சா குளோப் சிப்பிங் சேர்விஸ்
13. லக்ஸ்மன் றேடர்ஸ் அன்ட் கொன்றாக்ஸ்
14. கே.எல்.எஸ்.மரைன் சேர்விஸ்
15. யுனைட்ரெட் ஓசியானிக் மரைன் சேர்விஸஸ்
16. மரினோ லங்கா
17. சுதேஷ் என்ரர்பிறைசஸ் அன்ட் எக்ஸ்போர்ட்டஸ்
18. சாகர மரைன் அன்ட் என்ஜினியரிங் சேர்விஸ்
19. தருணி மரைன் சேர்விஸ்
20. நிரோஷ் மரைன் சேர்விஸஸ்
21. கே.எல்.குணசிறி அன்ட் சன்ஸ்
22. சன்கெம் இன்டஸ்ரீஸ்
23. சுதா சிப்பிங் சேர்விஸ்
24. கொழும்பு டொக்யாட்பிஎல்சி
25. தேவ் என்ஜினியரிங் (பிறைவேற்) லிமிற்றெற்
26. கனேடியன் ஸ்டார் (பிறைவேற்) லிமிற்றெற்
27. சுப்ரீம் பெற்றோ லங்கா (பிறைவேற்) லிமிற்றெற்

2014இல் 1,159 கப்பல்களுக்கு கழிவு அகற்றுதல் சேவை வழங்கப்பட்டதுடன், இதன் மூலம் 19,531 மெற்றிக் தொன்கள் கொண்ட எரிஉலை எண்ணெயும், 6,645 கன மீற்றர்கள் கொண்ட திண்மக் கழிவும் அகற்றப்பட்டு, தோதான தன்மையொன்றில் ஒழிக்கப்பட்டது.









2014இல் பதிவுக் கட்டணங்களிலிருந்தும், உத்தரவுப்பத்திரக் கட்டணங்களிலிருந்தும் தோற்றுவிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 9,915,150.00 ஆகும்.

**எண்ணெய் ஏற்றிஇறக்குதல் உத்தரவுப்பத்திரங்களை வழங்குதல்**

2014இல் எண்ணெய் ஏற்றிஇறக்கும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள 10 கப்பல்களுக்கு எண்ணெய் ஏற்றிஇறக்குதல் உத்தரவுப் பத்திரங்களை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை வழங்கியது. கப்பல்களுக்கு எண்ணெய் ஏற்றிஇறக்கும் விநியோகம் பிரதானமாக கொழும்பு துறைமுகத்திலேயே மேற்கொள்ளப் பட்டதுடன், மேலதிகமாக ஹம்பாந் தோட்டையில் மாகம்புர துறைமுகத்தில் எண்ணெய் ஏற்றிஇறக்குதலின் விநியோகம் தொடர்பில் உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப் பட்டன.

எண்ணெய் ஏற்றிஇறக்குதல் உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்ட கப்பல்கள்:

1. MT SHERMAC
2. MT SEA FALCON
3. MT WEALTHY
4. MT LM KELANI
5. MT MADURU OYA
6. MT LM NILWALA
7. LMS DIYALUMA
8. LSM LAXAPANA
9. LMS DUNHIDA

மேலதிகமாக, நிலத்தில் எண்ணெய் களஞ்சியப்படுத்தல் வசதிகளைப் பராமரிப்பதற்காக திருகோணமலையில் லங்கா IOCஇனாலும், மகம்புரவில் துறைமுக முகாமைத்துவக் கம்பனியினாலும் எண்ணெய் ஏற்றிஇறக்குதல் உத்தரவுப் பத்திரங்கள் பெறப்பட்டன.

இதேபோல எண்ணெய்த் தாங்கிகளைப் பயன்படுத்தி எண்ணெய் ஏற்றிஇறக்குதலின் விநியோகம் தொடர்பில் 10 வீதி தாங்கி அப்புறப்படுத்தல் சான்றுப்பத்திரங்களை ஜயசுந்தர மோட்டார்ஸ் பெற்றது.

2014இல் எண்ணெய் ஏற்றிஇறக்குதல் உத்தரவுப்பத்திரங்கள் வழங்கலில் இருந்து தோற்றுவிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 1,729,000.00 ஆகும்.



## 2014 - உலக சூழல் தினத்தையும், உலக சமுத்திரங்கள் தினத்தையும் கொண்டாடுதல்

2009இல் கடல்சார் சூழலின் முக்கியத்துவம் மீது உலக சமுதாயத்தை ஒளியூட்டு முகமாக உலக சமுத்திரங்கள் தினமாக ஜூன் 08ஐ ஐக்கிய நாடுகள் முதலில் கொண்டாடியது. ஜூன் 08 அன்று வருகின்ற உலக சமுத்திரங்கள் தினத்தையும், ஜூன் 5 வருகின்ற உலக சூழல் தினத்தையும் ஒன்றாகக் கொண்டாடியதே இவ் வருடத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின் விசேட அம்சமாகும்.

இதன் பிரகாரம் இணைந்த உலக சமுத்திரங்கள் தினத்தினதும், உலக சூழல் தினத்தினதும் கொண்டாட்டங்களுக்காக ஒரு தொடரிலான நிகழ்ச்சித்திட்டங்களைக் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை நடத்தியது. தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2014 ஜூன் 16 அன்று திருகோணமலையின் மாவட்ட செயலகத்தின் கேட்போர்கூடத்தில் நடத்தப்பட்டதுடன், இதற்கு சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்த தலைமை தாங்கினார். நிகழ்ச்சித்திட்டத்தில் அரசாங்க அலுவலர் கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலைச் சிறுவர்கள், கைத்தொழில் அதிபர்கள், உணவக உரிமையாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் அரச சார்பற்ற தாபனங்களின் அலுவலர்கள் ஆகியோர் உட்பட 250க்கு மேற்பட்டவர்கள் பங்கெடுத்தனர்.

திருகோணமலையில் கடல்சார் சூழலின் முக்கியத்துவம் மற்றும் அதை நிலைத்திருக்கும்தன்மையில் எவ்வாறு பராமரிப்பது அத்துடன் சூழல் தீழ்ப்பு இன்றி எவ்வாறு கடல்சார் சூழலை வைத்திருப்பது என்பதன் முக்கியத்துவம் மீது ஒரு தொடரிலான விரிவுரைகள் நடத்தப்பட்டன. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மகேஷ் ஜயவீரவினால் இந் நிகழ்வின் முக்கிய உரை ஆற்றப்பட்டதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கு விஞ்ஞானப் பிரிவின் தலைவர் பேராசிரியர் தேவக வீரக்கோன், ருகுணு பல்கலைக்கழகத்தின் சமுத்திரவியல், கடல்சார் புவிசரிதவியல் பிரிவின் தலைவர் கலாநிதி தேர்னி பிரதீப் குமார மற்றும் சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் உயிரக பரவலாக்கச் செயலாளர் திரு.டி.எம்.மனோஜ் ஆகியோரினால் ஏனைய விரிவுரைகள் வழங்கப்பட்டன.

சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்தவின் ஆதரவின் கீழ் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் வருடாந்த சமுத்திர டைஜஸ்ட்டை ஆரம்பித்து வைத்தல் நடத்தப்பட்டது.

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக திருகோணமலையில் அதே தினத்தன்று முதலாவது ஐந்நூறு நாற்றுக்களை நடுவதன் மூலம் திருகோணமலையில் சல்லி கடற்கரையில் 2,500 கண்டல் தாவர நாற்றுக்களை நடும் நிகழ்ச்சித்திட்டத்தை சூழல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்த அங்குரார்ப்பணம் செய்தார். இதில் கடற்படை, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற தாபனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 100 அலுவலர்கள் பங்கெடுத்தனர்.

உலக சூழல் தினத்திற்கும், உலக சமுத்திரங்கள் தினத்திற்கும் பக்கம்பக்கமாக 2014 ஜூன் 15 அன்று இரு பகுதிகளில் புறாத்தீவுடன் இணைந்திருந்த முருகைக் கற்பாறைத் தொடரை சுத்தப்படுத்து வதற்காக 50 நீரில்முழ்குபவர்களின் பங்கெடுப்புடன் நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்டது.

மேலதிகமாக, தெகிவளையில் கரையோரச் சுத்தப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்கள் நடத்தியதுடன், உலக சூழல் தினத்திற்கும், உலக சமுத்திரங்கள் தினத்திற்கும் பக்கம்பக்கமாக கொழும்பு, நீர்கொழும்பு, களுத்துறை, சிலாபம், காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒன்பது தெரிவு செய்யப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள் சுத்திகரிக்கப்பட்டன.

மீன்பிடித் துறைமுகங்கள் சுத்திகரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கெடுத்த நிறுவனங் களினதும், நபர்களினதும் மத்தியில் கடற்படை, கரையோரக் காவல் திணைக்களம், கரையோரப் பேணல் திணைக்களம், மத்திய சூழல் அதிகார

சபை, மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், பொலிஸ், மீனவர், பிரதேச சபைகள், இலங்கை துறைமுக அதிகாரசபை, சுகாதார மருத்துவ அலுவலர்கள் மற்றும் அரசாங்க சார்பற்ற தாபனங்கள் விளங்குகின்றன.

நிகழ்ச்சித்திட்டத்தின் போது போத்தல்கள், குப்பிகள், பொலித்தீன், நைலோன், இறப்பர், இரும்பு, பிளாஸ்ரிக், துணி மற்றும் கண்ணாடி போன்ற உயிரகரீதியாக அழிவடையாத கழிவுகள் சேகரிக்கப்பட்ட அதேவேளை சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள பிரதேச சபைகளும், நகர சபைகளும் இந்த கழிவை ஒழிப்பதில் அவசியமான உதவியை வழங்கின.

மீன்பிடி துறைமுகங்கள் சுத்திகரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் திகதிகள், இடங்கள் மற்றும் பங்கெடுப்பாளர்களின் எண்ணிக்கை வருமாறு:

| மாவட்டம் | திகதி மற்றும் இடம் | பங்கெடுப்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஹம்பாந்தோட்டை | **20.06.2014** – கிரிந்த மீன்பிடி துறைமுகம் | 51 |
| மாத்தறை | **05.06.2014** மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகம | 64 |
| காலி | **06.06.2014** – ஹிக்கடுவை மீன்பிடி துறைமுகம் | 61 |
| கொழும்பு | **19.06.2014** – தெகிவளை மீன்பிடி துறைமுகம் | 53 |
| நீர்கொழும்பு | **10.06.2014** – டிக்கோவிற்ற மீன்பிடி துறைமுகம் | 125 |
| சிலாபம் | **24.06.2014** – கற்பிட்டி மீன்பிடி துறைமுகம் | 50 |
| களுத்துறை | **11.06.2014** – பேருவளை மீன்பிடி துறைமுகம் | 50 |
| திருகோணமலை | **22.07.2014** – கொட் மீன்பிடி துறைமுகம் | |
| அம்பாறை | **08.07.2014** – ஒலுவில் மீன்பிடி துறைமுகம் | 70 |

**கிரிந்த மீன்பிடி துறைமுகத்தைச் சுத்திகரித்தல்**





கிரிந்த மீன்பிடி துறைமுகத்தைச் சுத்திகரித்தல்





ஹிக்கடுவை மீன்பிடி துறைமுகத்தைச் சுத்திகரித்தல்





தெகிவளை மீன்பிடி துறைமுகத்தைச் சுத்திகரித்தல்





**சர்வதேச கரையோர சுத்திகரித்தல் நிகழ்ச்சித்திட்டம் - 2014**

| பராமரிப்பு முன்-கொடுப்பனவுகள் | 256,607.91 | 156,798.68 |
| வேறு | 586,319.34 | 49,398.92 |
| | **2,071,779.68** | **602,149.49** |

| குறிப்பு 14 | அறவிடக்கூடிய பணியாளர் கடன்கள் | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| 01.01.2014இல் உள்ளவாறு ஆரம்பக் கடன் மீதி | 6,238,964.09 | 5,633,670.23 |
| **கூட்டுக:** | | |
| ஆண்டின் போது வழங்கப்பட்ட கடன் | 2,115,000.00 | 3,516,000.00 |
| மொத்த அறவிடக்கூடிய தொகை | 8,353,964.09 | 9,149,670.23 |
| **கழிக்குக:** | | |
| ஆண்டின் போது அறவிடப்பட்ட தொகை | 3,194,460.91 | 2,910,706.14 |
| **31.12.2012இல் உள்ளவாறு மீதி** | **5,159,503.18** | **6,238,964.09** |

| குறிப்பு 15 | நடைமுறைப் பொறுப்புக்கள் | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| கொடுப்பனவுக்குரிய மேலதிகநேர வேலை படிகள் | 49,775.63 | 2309.69 |
| கொடுப்பனவுக்குரிய வேறு படிகள் | 35,250.00 | 7,500.00 |
| கொடுப்பனவுக்குரிய பிரயாணச் செலவினங்கள் | 252,284.72 | 157,154.75 |
| கிடைக்கவேண்டிய WRS | 3,750.00 | 3,000.00 |
| கொடுப்பனவுக்குரிய மின்சார மற்றும் நீர் சிட்டை | 159,633.52 | 139,826.40 |
| வுங்கி வைப்புக்கள் | 25,000.00 | - |
| கொடுப்பனவுக்குரிய தொலைபேசி சிட்டைகள் | 70,539.18 | 61,643.26 |
| கொடுப்பனவுக்குரிய வேறு செலவினங்கள் | - | 51,435.00 |
| கொடுப்பனவுக்குரிய முத்திரைத் தீர்வை | 75.00 | 25.00 |
| இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் | 7,000,000.00 | - |
| ஹெம்சன்ஸ் இன்ரர்நஹனல் பிறைவேற் லிமிற்றெற் | 574,560.00 | - |
| கைத்தொழில் நிலஅளவீடு எந்திரவியலாளர்கள் | 794,633.16 | - |
| பேருவளை ஹொலிடே ரிசோர்ட் | 21,500.00 | - |
| நெலு அட்வர்டைஸிங் பிறைவேற் லிமிற்றெற் | 17,136.00 | - |
| சி.டபிள்யு – திறந்த பல்கலைக்கழகம் | 62,595.00 | - |
| அரசாங்க அச்சகம் | 100,800.00 | - |
| அனலிட்டிக்ல் இன்ஸ்ருமன்ட்ஸ் பிறைவேற் லிமிற்றெற் | 3,712,808.01 | - |
| ஹல்கெம் லங்கா பிறைவேற் லிமிற்றெற் | 1,819,209.17 | - |
| சதோச மோட்டர்ஸ் பிறைவேற் லிமிற்றெற் | 340,295.48 | - |
| ஹசரங்க மோட்டர்ஸ் | 138,000.00 | - |
| சஞ்ஜீவ மோட்டர்ஸ் பிறைவேற் லிமிற்றெற் | 99,275.00 | - |
| ஜி.என்.பரசவிதான | 51,460.00 | - |
| சுப்பர் கிளீனிங் அன்ட ஜெனிரோரியல் பிறைவேற் லிமிற்றெற் | 37,584.96 | - |
| பிரவுன்ஸ் அன்ட் கம்பனி பிறைவேற் லிமிற்றெற் | 16,422.00 | - |
| நித்மா ஐரி சொலிஷன்ஸ் | 6,875.00 | - |
| ரொயோட்டா லங்கா பிறைவேற் லிமிற்றெற் | 60,551.54 | - |
| கே.எம். அன்ட் என்ஜினியர்ஸ் மோட்டர்ஸ் | 63,142.00 | -- |
| சுஜீவா மோட்டர்ஸ் பிறைவேற் லிமிற்றெற | 30,450.00 | - |
| | **15,543,605.37** | **422,894.10** |

| குறிப்பு 16 | பணியாளர் கடன் நிதியம் | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| 01.01.2013இல் உள்ளவாறு ஆரம்பக் கடன் மீதி | 6,752,928.71 | 6,565,640.22 |
| **கூட்டுக:** | | |
| ஆண்டுக்கான வட்டி | 231,924.57 | 188,145.59 |
| **கழிக்குக:** | | |
| வங்கிக் கட்டணங்கள் | | (857.10) |
| **31.12.2014இல் உள்ளவாறு மூடுதல் கடன் மீதி** | **6,984,853.28** | **6,752,928.71** |

| குறிப்பு 17 | பணிக்கொடைக்கான ஏற்பாடு | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| 01.01.2013இல் உள்ளவாறு ஆரம்பக் கடன் மீதி | 7,284,380.00 | 4,480,874.50 |
| மீளவாயபப்ட்ட மீதி | | 1,544,400.00 |
| ஆண்டுக்கான ஏற்பாடு | 1,939,000.00 | 1,301,630.50 |
| | 9,223,380.00 | 7,326,905.00 |
| **கூட்டுக:** | | |
| **ஆண்டின் போது கொடுப்பனவுகள்** | 88,320.00 | 42,525.00 |
| **31.12.2014இல் உள்ளவாறு மீதி** | **9,135,060.00** | **7,284,380.00** |

| குறிப்பு 18 | அரசாங்க உதவுதொகைகள் மற்றும் மூலதனம் | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| 01.01.2014இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | 38,211,546.13 | 43,404,750.36 |
| திருத்தங்களின் செம்மைப்படுத்தல் | | 189,508.50 |
| **கூட்டுக:** | | |
| ஆண்டின் போது கிடைத்த மூலதன உதவுதொகைகள் | 81,567,016.84 | 42,493,291.50 |
| **கழிக்குக:** | | |
| வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது (SLAS 24) | 37,431,973.75 | 33,394,181.67 |
| நடந்துகொண்டிருக்கும் வேலை மீதான மூலதனச் செலவினங்கள் | 17,390,970.15 | 14,481,822.55 |
| **31.12.2014இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **64,955,619.07** | **38,211,546.13** |

| குறிப்பு 19 | திரண்ட பற்றாக்குறை | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| 01.01.2014இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | (8,572,678.56) | (4,223,489.36) |
| பின்போடப்பட்ட வருமானத்தின் செம்மைப்படுத்தல் | | - |
| தவறுகளின் செம்மைப்படுத்தல் | | - |
| பின்போடப்பட்ட வருமானத்திற்கான கைமாற்றம் | | - |
| மீளவாயப்பட்ட மீதி – பணிக்கொடைகள் | | (1,544,400.00) |
| ஆண்டுக்கான பற்றாக்குறை/மேன்மிகை | (4,920,152.70) | (2,804,789.20) |
| **31.12.2014இல் உள்ளவாறு மீதி** | **(13,492,831.26)** | **(8,572,678.56)** |

| குறிப்பு 20 | கடல்சார் சூழல் பாதுகாப்பு நிதியம் | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| 01.01.2014இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | 14,579,453.20 | 13,355,525.74 |
| வட்டி வருமானம் - திறைசேரி உண்டியல்கள் | 936,696.93 | 1,223,927.46 |
| **31.12.2014இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **15,516,150.13** | **14,579,453.20** |

| குறிப்பு 21 | EIA வைப்பு | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| 01.01.2014இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | 447,043.50 | 486,990.50 |
| **கழிக்குக:** | | |
| ஆண்டின் போது ஏற்கப்பட்ட செலவினம் | | 39,947.00 |
| **31.12.2014இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **447,043.50** | **447,043.50** |

| குறிப்பு 22 | முன்கூட்டியே பெறப்பட்ட வருமானம் | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| 2014க்கான கழிவு உபசரணை சேவைப் பதிவு மற்றும் அனுமதிச்சீட்டுக் கட்டணங்கள் | 1,081,500.00 | 1,230,500.00 |
| 2014க்கான எண்ணெய் நிரப்புதல், ஏற்றுதல் பதிவு மற்றும் அனுமதிச்சீட்டுக் கட்டணங்கள் | 6,000.00 | 457,000.00 |
| 2014 கழிவு ஒழித்தல் கட்டளைகள் பதிவு | 314,719.18 | 51,500.00 |
| 2014 விநியோகஸ்தர்களின் பதிவு | 51,000.00 | 276,000.00 |
| | **1,453,219.18** | **2,015,000.00** |

| குறிப்பு 23 | கிடைத்த உதவுதொகைகள் | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| ஆண்டின் போது பெறப்பட்ட உதவுதொகைகள் | **3,858,594.00** | 3,858,594.00 |
| **கழிக்குக:** | | |
| வருமான, செலவினக் கணக்குக்கு கைமாற்றங்கள் | - | - |
| **31.12.2014இல் உள்ளவாறு மீதி** | **3,858,594.00** | 3,858,594.00 |

| குறிப்பு 24 | முன்னேற்றத்தில் உள்ள மூலதன வேலை | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| 01.01.2014இல் உள்ளவாறு மீதி | 14,481,822.55 | - |
| **கூட்டுக:** | | |
| ஆண்டின் போது கைமாற்றங்கள் | 17,390,970.15 | 14,481,822.55 |
| | 31,872,792.70 | 14,481,822.55 |
| **கழிக்குக:** | | |
| ஆண்டின் போது ஏற்பட்ட செலவினங்கள் | 12,342,641.13 | - |
| 31.12.2014இல் உள்ளவாறு மீதி | **19,530,151.57** | **14,481,822.55** |

| குறிப்பு 25 | மூலதன உதவுதொகைகள் மீளிணக்கம் | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| ஆண்டுக்கான மூலதன உதவுதொகைகள் | 38,261,000.00 | 36,875,000.00 |
| வாகனத் தொகுதி | 18,780,000.00 | - |
| EIA செலவினத்தின் கைமாற்றம் | - | 39,947.00 |
| அடிதாங்கி நீர் கருத்திட்டங்களுக்கான உதவுதொகைகள் | 4,462,323.06 | 5,578,344.50 |
| பச்சை துறைமுகங்கள் அபிவிருத்தித் கருத்திட்டம் | 7,362,959.65 | - |
| தெயற்ற செவன கருத்திட்டம் | 358,093.00 | - |
| முன்னேற்ற கணக்கில் வேலைக்கான கைமாற்றங்கள் | 12,342,641.13 | - |
| கிடைத்த மொத்த மூலதன உதவுதொகைகள் | 81,567,016.84 | 42,493,291.50 |
| **கழிக்குக:** | | |
| நிலையான சொத்துக்களின் கையடக்கம் | (39,269,193.50) | (4,952,734.00) |
| முன்னேற்ற கணக்கில் வேலைக்கான கைமாற்றங்கள் | (17,390,970.15) | (14,481,822.55) |
| | **24,906,853.19** | **23,058,734.95** |

26 2013 நொவம்பரில் 6-மாத திறைசேரி உடனுண்டியல்களில் அதிகார சபை ரூபா 12,979,451.23ஐ முதலீடு செய்ததுடன், இது 2014ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைந்ததுடன், மொத்தத் தொகை (வட்டி மற்றும் முதலீட்டுத் தொகை) திறைசேரி உண்டியல்களில் மீள்-முதலீடு செய்யப்பட்டது. திறைசேரி உடனுண்டியல்களிலிருந்து வட்டி வருமானமாக 2014ஆம் ஆண்டின் போது ரூபா 936,696.03 ஈட்டப் பட்டது. எனவே, மீள்-முதலீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 13,916,147.26 ஆகும். இது நிதிசார் நிலையின் கூற்றுக்களில் நடை முறைச் சொத்துக்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

27. நாளாந்த அடிப்படை மீது திறைசேரி உடனுண்டியல்களை மீள்-கொள் வனவு செய்வதற்காக நடைமுறைக் கணக்கில் நாளின் இறுதியில் மேன்மிகையிலான பண மீதியை முதலீடு செய்வதை அதிகார சபை ஆரம்பித்தது. இந் நடைமுறை ஆண்டின் இறுதிவரை தொடர்ந்த துடன், வட்டி வருமானமாக ரூபா 1,521,305.30 பெறப்பட்டது. இந்த வட்டி வருமானம் ஆண்டின் மொத்த வருமானத்தில் உள்ளடக்கப்பட்டு ள்ளது.

28. ஆண்டின் போது ரூபா 39,269,193.50 பெறுமதியான நிலையான சொத்துக் களை அதிகார சபை பெற்றுக் கொண்டது. இச் சொத்துக்கள் அலுவலக உபகரணங்கள், மரத் தளபாடங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், தொழில்நுட்ப உபகரணங்கள், கணனிகள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியன வற்றை உள்ளடக்குகின்றன. வாகன உதவுதொகைகளாக (இரு கார்கள்) திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 18,780,000.00ஐ இப்பெறுமதி உள்ளடக்குகின்றது. மேலதிகமாக, வேறு சொத்துக்களின் கையகப் படுத்துவதற்காக ரூபா 20,489,195.50 கிடைத்தது.

29. சாத்தியவள ஆய்வொன்றைப் பொறுப்பேற்பதற்காக ஏற்பட்ட செலவினங்களை உள்ளடக்கு வதற்காக 01.01.2012இலிருந்து செயற்படத்தக்கதாக நிருவாக கட்டணமொன்றை சுமத்துவதென பணிப்பாளர் சபை தீர்மானித்தது. இதன் பிரகாரம், 2012ஆம் ஆண்டில் கோர்ன் லங்காவிலிருந்து ரூபா 500,000.00 கிடைத்தது. சூழல் சாத்தியவள ஆய்வு தொடர்பிலான செலவினங்களைக் கழித்த பின்னர் பணத்தின் மீதியானது நிதிசார் நிலையின் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின்' கீழ் சூ.தா.ம. கருத்திட்டக் கட்டணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டின் இறுதியில் மீதி ரூபா 447,043.50 ஆகும்.

30 **பணிக்கொடைகளுக்கான ஏற்பாடு – கொள்கைகளின் மாற்றம்**

1. பணிக்கொடைகளைக் கணக் கெடுப்பதன் அடிப்படையானது அடிப்படைச் சம்பளத்தின் தொகை மற்றும் வாழ்க்கைச் செலவு ஆகியனவாக மாற்றப் பட்டுள்ளது (தொழில் ஆணை யாளரின் 05.11.2013 திகதி யிடப்பட்ட பணிப்புரையின் பேரில்).

2. பொது வியாபார முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை யின் பிரகாரம் 60 வயதுக்கு இளைப்பாற்று வயது அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், இளைப்பாற்று வயதாக 60 வயதை அதிகார சபை கரிசனைக்கெடுத்துள்ளது.

3. பொது வியாபார முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை யின் பிரகாரம் ஒரு புறம்பான கணக்கு பணிக்கொடைகளுக் காக நிலவுகின்றது (ஒதுக்கீடு களுக்கு சமமான ஒரு பணப் பெறுமதி). 2014ஆம் ஆண்டில் கணக்கொன்று திறக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், போதியளவு நிதியங்கள் கிடைக்காததினால் அதை அதிகார சபை ஆரம்பிக்க

வில்லை. கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டு கிட்டுகின்ற மேன்மிகையான நிதியங்களின் பிரகாரம் கைமாற்றப்படும்.

**31 நடந்துகொண்டிருக்கும் மொத்த வேலை**

ஆண்டின் போது திறைசேரியிலிருந்து 38.261 மில்லியன் ரூபா கொண்ட தொகையொன்று கிடைத்தது. இதில் ரூபா 20,870,029.85 மொத்தச் செயற்பாடுகளுக்காக செலவழிக்கப்பட்டது. மீதியான ரூபா 17,390,970.15 பண மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. விநியோகஸ்தர்கள் விநியோகங்களை வழங்குவது மீது ஏற்பட்ட தாமதமே இந்த அலுவல்களின் நிலைக்கான காரணமாகும். மேலதிகமாக முன்னைய ஆண்டிலிருந்து ரூபா 2,139,181.42 கொண்ட தொகையொன்று முன்கொண்டு வரப்பட்டது. இதன் பிரகாரம் நிதிசார் நிலையின் கூற்றில் ஒப்புரவின் கீழ் ரூபா 17,390,970.15 கொண்ட தொகையொன்று காட்டப்பட்டுள்ளது.

**32 கையிருப்பு**

ஆண்டின் போது கையிருப்பக்கு சீராக்கல்கள் செய்யப்படவில்லை. நிதிசார் கூற்றில் நடைமுறைச் சொத்தொன்றாக கையிருப்பு காட்டப்பட்டுள்ளது.

**33 நூலக நூல்கள்**

நூலக நூல்களைக் கொள்வனவு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் இலாப, நஷ்டக் கணக்குக்கு கைமாற்றப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட நூல்களினதும், உதவு தொகைகளாகக் கிடைத்த நூல்களினதும் பெறுமதி 2014ஆம் ஆண்டில் மதிப்பாயப்படவில்லை. எனினும், நூல்கள் மீதான உண்மைக் கோவையொன்று தயாரிக்கப்பட்டதுடன், சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களினதும், 2012இன் முன்னர் அன்பளிப்புகளாக கிடைத்த புத்தகங்களினதும் பெறுமதியை மதிப்பிடுவதற்காக குழவொன்றை பொது முகாமையாளர் நியமித்தார். எனினும், நடைமுறையிலான கஷ்டங்களின் காரணமாக இது வெற்றியடையவில்லை. இதனால் நிதிசார் நிலையின் கூற்றில் 2012க்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட நூல்களின் பெறுமதியை உள்ளடக்குவதில்லை என தீர்மானிக்கப்பட்டதுடன், நூல்களினதும், வெளியீடுகளினதும் பதிவேட்டினைப் பராமரிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

**34 விழிப்பியல் பலகைகள்**

முழு நாட்டையும் உள்ளடக்கி 2008ஆம் ஆண்டு முதல் தகவல் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. கடந்த காலக் கணக்குகளின் பிரகாரம், 2008–2012 காலத்தில் தகவல் பலகைகளை நிறுவுவதற்காக ரூபா 7,197,220 செலவழிக்கப்பட்டுள்ளது.

31.12.2014இல் உள்ளவாறு தமது பௌதீக நிலையையும், சமம்பந்தப்பட்ட விபரங்களையும் பிராந்திய அலுவலகங்கள் அறிக்கையிட்டுள்ளன. இதனால் விரிவான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வு, முகாமைத்துவ குழுவின் கரிசனைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

ஓவ்வொரு விழிப்பியல் பலகைக்கு ஒரு இலக்கம் வழங்கப்பட்டதுடன், GPS ஊடாக அமைவிடத்தை அடையாளம் காண்பதும், பலகைகளின் புகைப்படங்களை எடுப்பதும் செய்யப்பட்டுள்ளன.

அறிக்கைகளின் பிரகாரம் இயற்கையான காரணங்கள் (சூரிய கதிர்வீச்சு மற்றும் காற்று போன்ற), அவை அமைந்துள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி

செயற்பாடுகள் மற்றும் மனிதர்களினதும், விலங்குகளினதும் செயற்பாடுகள் ஆகியவற்றின் நிமித்தம் சில பலகைகள் சேத மடைந்துள்ளன. அதேவேளை, அதிகார சபையின் நேரடியான கட்டுப்பாட்டுக்கு அப்பால் விழிப்பியல் பலகைகள் உள்ளதாக கவனிக்கப்பட்டது. கணக்காய்வு, முகாமைத்துவ குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினதும், மேலே குறிப்பிடப்பட்ட உண்மை களினதும் பின்னணியில் அதிகார சபையின் நிலையான சொத்துக் களில் விழிப்பியல் பலகைகளின் பெறுமதியை உள்ளடக்கக்கூடாது என அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டதுடன், பிராந்திய அலுவலகங் களின் ஊடாக பலகைகளின் நிலைமை மீதான தொடர்ச்சியான கண்காணித்தலை உறுதிப்படுத்து வதற்காக முறைமையியல் ஒன்றை அறிமுகப்படுத்துவதென தீர்மானிக்கப் பட்டது.

இதன் பிரகாரம், 2008 முதல் 2012 வரை தாபிக்கப்பட்ட விழிப்பியல் பலகைகளின் பெறுமதி 2014ஆம் ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

35 **இரசாயனங்களினதும், கண்ணாடி உபகரணங் களினதும் கையிருப்பு**

கொள்வனவு ஆண்டின் செலவின த்திற்கு இரசாயனங்களினதும், கண்ணாடி உபகரணங்களினதும் கொள்வனவின் மொத்த ஆகு செலவைப் பெறுமதியழிப்பதே இரசாயனங்களினதும், கண்ணாடி உபகரணங்களினதும் தொடர்பிலான அதிகாரசபையினால் பின்பற்றப்படும் கொள்கையாகும்.

ஆண்டின் இறுதியில் இரசாயனங் களின் கையிருப்புக்களைச் செம்மை யாகக் கணக்கிடுவதில் நிலவுகின்ற செயன்முறையிலான கஷ்டமும், மிகவும் குறுகிய காலமொன்றினுள் பயன்பாட்டிலிருந்து கண்ணாடி பண்டங்கள் அகற்றப்படுவதுமே இம்முறையை பயன்படுத்துவதற்கான காரணங்களாகும். எனினும், இரசாயனங்களுக்கும், கண்ணாடி உபகரணங்களுக்கும் திறமான பதிவேடொன்றை ஆய்வுகூடம் பேணுகின்றது.

36 **31.12.2014இல் உள்ளவாறு விசாரணையில் உள்ள சட்ட நடவடிக்கை**

1) பாணந்துறை கடற்கரைக்கு அப்பால் வெளித்துறைமுகத்தில் நங்கூரமிடப் பட்டிருந்த Thermopylae Sierra என்ற பெயரிலான சைப்பிரஸ் கொடி நாட்டப்பட்ட கப்பல் 2012 ஓகஸ்ட் 13 அன்று கடல்சார் சூழல் தீழ்ப்பொன்றை விளைவித்ததுடன், சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் கப்பலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் வழக்குத் தொடர்பில் சட்டத்தின் பிரிவு 50இன் கீழ் குற்றச்சாட்டு ஒன்றைச் சட்டமா அதிபர் தாக்கல் செய்ய வுள்ளார்.

   சிவில் வழக்கின் கீழான செயற்பாட்டின் போது ஏற்பட்ட ஆகுசெலவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள துடன், இது தொடர்பில் சட்டமா அதிபரின் தீர்மானம் எதிர் பார்க்கப்படுகின்றது.

2) M.T. CHAHAT என அழைக்கப் பட்ட கப்பல் ஒன்றினால் விளைவிக்கப்பட்ட கடல்சார் தீழ்ப்பு தொடர்பிலான வழக்கு சம்பந்தமாக மேல் நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியுள்ளதுடன், ஆதலினால் வழக்கு முடிவடை ந்துள்ளது.

3) சட்ட மா அதிபரினால் அழைக்கப்பட்டுள்ள சகல ஆவணங்களும், தகவலும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நடவடிக்கை தொடர்பில் சட்டமா அதிபரின் தீர்மானம் எதிர் பார்க்கப்படுகின்றது.

## 6.7 கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
## நிதிசார் நிலையின் கூற்று
## 2010 முதல் 2014 வரை (ரூபா)

| சொத்துக்கள் | | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | |
| பண மீதி | 10 | 31,857,634.23 | 15,553,928.21 | 5,512,790.27 | 13,619,138.16 | 7,069,591.12 |
| கடன்தருனர்கள் | 11 | 47,257.00 | 22,250.00 | 13,500.00 | 16,935.00 | 98,437.49 |
| வைப்புக்கள் | 12 | 2,029,500.00 | 2,014,100.00 | 1,219,100.00 | 1,137,800.00 | 480,800.00 |
| முன்-கொடுப்பனவுகள் | 13 | 2,071,779.68 | 602,149.49 | 597,394.81 | 370,250.73 | 533,538.35 |
| மூலதனங்கள் (திறைசேரி உண்டியல்கள்) | | 13,916,147.26 | 12,979,451.23 | 11,755,525.00 | 10,709,913.55 | 9,999,999.75 |
| அறவிடவேண்டிய பணியாளர் கடன்கள் | 14 | 5,159,503.18 | 6,238,964.09 | 5,633,670.23 | 6,257,776.56 | 3,929,914.76 |
| கையிருப்பு | 23 | 3,858,594.00 | 3,858,594.00 | | | |
| **நடைமுறை-சாரா சொத்துக்கள்** | | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் இயந்திராதிகள் | 09 | 64,955,616.96 | 38,211,544.09 | 43,404,750.36 | 39,814,309.96 | 22,359,481.89 |
| மொத்தச் சொத்துக்கள் | | **123,896,032.31** | **79,480,981.11** | 68,136,730.67 | 71,926,123.96 | 44,471,763.35 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | | |
| திரண்ட கொடுப்பனவு | 15 | 15,543,605.37 | 422,894.10 | 2,372,439.26 | 10,837,615.91 | 273,840.48 |
| வைப்புக்கள் | 21 | 447,043.50 | 447,043.50 | 486,990.50 | - | - |
| முன்-கிடைத்த வருமானங்கள் | 22 | 1,453,219.18 | 2,015,000.00 | 1,694,000.00 | 12,309,913.55 | 11,600,000.00 |
| **நடைமுறை-சாரா பொறுப்புக்கள்** | | | | | | |
| கடல்சார் சூழல் பாதுகாப்பு நிதியம் | 20 | 15,516,150.13 | 14,579,453.20 | 13,355,525.74 | 6,389,200.68 | 6,204,711.22 |
| இடுக்கண் கடன்களுக்கான தொகை | 16 | 6,984,853.28 | 6,752,928.71 | 6,565,640.22 | 3,756,087.50 | 2,866,922.50 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 17 | 9,135,060.00 | 7,284,380.00 | 4,480,874.50 | 33,292,817.64 | 20,945,474.20 |
| மொத்தப் பொறுப்புக்ககள் | | **49,079,931.46** | **31,501,699.51** | **28,955,470.22** | **33,292,817.64** | **23,526,289.15** |
| நிகர சொத்துக்கள் | | **74,816,100.85** | **47,979,281.60** | **39,181,261.00** | **38,633,306.32** | **22,359,482.03** |
| **ஓப்புரவுகள்** | | | | | | |
| அரசாங்க உதவுதொகை மற்றும் மூலதனம் (பின்போடப்பட்ட உதவுதொகைகள்) | 18 | 64,955,616.49 | 38,211,543.55 | 43,404,750.36 | 23,526,289.15 | 19,233,732.64 |
| திரண்டுள்ள பற்றாக்குறை | 19 | (13,492,831.26) | (8,572,678.50) | (4,223,489.36) | (1,181,004.78) | 1,166,807.12 |
| முன்னேற்றத்திலுள்ள வேலை மீதான மூலதன செலவினம் | 24 | 19,530,151.57 | 14,481,822.55 | - | - | - |
| மூலதன உதவுதொகைப் பொருட்பட்டியல் | 23 | 3,858,594.00 | 3,858,594.00 | - | - | - |
| மொத்த உரித்துக்கள் | | **74,816,100.85** | **47,979,281.60** | **39,181,261.00** | 38,633,306.32 | **23,526,289.15** |

# 6.8 கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை நிதிசார் செயற்பாடுகளின் கூற்று 2010 முதல் 2014 வரை

| | குறிப்புகள் | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|---|
| திறைசேரி உதவுதொகைகள் | 1 | 100,052,473.75 | 79,059,481.67 | 79,902,066.62 | 53,327,215.80 | 48,164,438.86 |
| பதிவு மற்றும் உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் | 2 | 12,038,930.82 | 11,976,053.17 | 10,033,547.94 | 9,242,201.03 | 4,438,000.00 |
| வேறு வருமானங்கள் | 3 | 2,619,793.00 | 1,168,403.50 | 1,095,406.19 | 969,145.95 | 380,304.19 |
| **மொத்த வருமானம்** | | **114,711,197.57** | **92,203,938.34** | **91,031,020.75** | **63,538,562.78** | **52,982,743.05** |
| **செலவினங்கள்** | | | | | | |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 4 | 55,794,565.26 | 41,797,413.42 | 39,005,981.99 | 29,670,533.99 | 26,341,796.16 |
| விநியோகங்கள் மற்றும் பாவனைக்குரியவை | 5 | 6,539,776.55 | 5,297,828.16 | 4,329,712.86 | 2,852,673.76 | 2,398,219.34 |
| வேறு மீளவரும் செலவினங்கள் | 6 | 19,865,034.64 | 14,482,504.22 | 13,081,247.73 | 11,975,763.90 | 9,554,829.06 |
| உதவு தொகைகள் மற்றும் கைமாற்றங்கள் | 7 | 24,906,853.19 | 23,058,734.95 | 26,924,095.44 | 13,031,810.11 | 11,000,148.32 |
| நிதிசார் செலவினங்கள் | 8 | 35,430.00 | 36,800.00 | 47,162.10 | 40,142.30 | 20,195.00 |
| நிலையான சொத்துக்களின் மதிப்பிறக்கம் | 9 | 12,525,120.63 | 10,335,446.79 | 9,457,531.25 | 5,825,405.76 | 3,713,425.21 |
| **மொத்தச் செலவினங்கள்** | | **119,666,780.27** | **95,008,727.55** | **92,845,731.37** | **63,396,329.82** | **53,028,613.09** |
| காலத்திற்கான பற்றாக்குறை/மேன்மிகை | | **(4,955,582.70)** | **(2,804,789.20)** | **(1,814,710.62)** | **142,232.96** | **( 45,870.04)** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஎம்/எல்/எம்ஈபீஏ/1/14/44 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2015 ஆகஸ்ட் 09

தலைவர்,

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை

**கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சுற்றாடல் மாசடைதலைப் பாதுகாத்தல் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 15,516,150 தொகையான கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு நிதியம், அதிகார சபைக்குச் சொந்தமான ஒதுக்கமாக இருந்த போதிலும் அது நடைமுறையல்லாப் பொறுப்பொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் பிரகாரம், இருப்புக்களின் பெறுமதி கிரயம் அல்லது தேறக் கூடிய தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் ஆகக் குறைந்த பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டிய போதிலும், கிரயம் ரூபா 3,858,954 தொகையான எண்ணெய் தெளிக்கும் கருவிகளின் (Oil spread disbursing) இருப்பின் தேறக்கூடிய தேறிய பெறுமதி தீர்மானிக்கப்படாமல் கிரயம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதியுரைச் சேவைக்காக கட்டிடத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 158,248 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3

(ஆ) பசுமை மீன்பிடித் துறைமுகமொன்றினை நிர்மாணிப்பதற்காக பொதுத் திறைசேரி ரூபா 7,362,959 தொகையினை மானியமாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக வருமானமொன்றாகவும் அத்தொகையில் ரூபா 362,959 தொகை உரிய ஆண்டின் செலவினமொன்றாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மேலும், நிறுத்தி வைக்கப்பட்ட பணமான ரூபா 7,000,000 எவ்வித கொடுக்கல் வாங்கலும் மேற்கொள்ளப்படாதிருக்கும் போது ஆண்டின் செலவினமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மூலதனச் செலவினமாக அரசாங்கத்திலிருந்து கிடைத்த மூலதன நிதி ஏற்பாடுகளில் செலவினங்களைச் செய்யாது சேமிக்கப்பட்ட ரூபா 19,530,152 தொகை நடைமுறை வேலை செலவு மீதியொன்றாகக் கருதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மூலதன மானியமாக வழங்கப்பட்ட தொகையில் ஆண்டின் செலவினமாகப் பதிவழிக்கப்பட்ட ரூபா 24,906,853 தொகை தொடர்பான செலவின விபரம் மற்றும் விரிவான பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் திர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சுற்றாடல் மாசடைதலைப் பாதுகாத்தல் அதிகாரச்சட்டத்தின் 16(3) ஆம் பிரிவு | பணிப்பாளர் சபை செயலாளராக நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் சட்டத்துறையில் அல்லது கம்பனி செயலாளர் நடவடிக்கை மற்றும் நிறுவனம் தொடர்பான போதியளவான அனுபவமொன்றுடன் தகைமையுள்ள ஒருவராக இருக்க வேண்டியமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் அந்தத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கவில்லை |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 751(i) | ரூபா 1,782,436 பெறுமதியான 02 ஆய்வுகூட உபகரணங்கள் இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை |
| (ii) நிதிப்பிரமாணம் 757(ஆ) | மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை |

| | |
|---|---|
| (இ) 2011 மார்ச் 24 ஆந் திகதிய 2/2011 ஆம் இலக்க முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல் தொடர்பான அதிகாரசபையின் உள்ளக சுற்றறிக்கை | 21 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 190,200 தொகை செலவிடப்படாமல் மீண்டும் முழுமையாகத் தீர்க்கப்பட்டிருந்ததுடன் பெறப்பட்ட முற்பணத் தொகையிலிருந்து 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவொன்று மீண்டும் பணமாகச் செலுத்தப்பட்ட 60 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,955,583 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,804,789 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,150,794 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மொத்த வருமானம் ரூபா 22 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 24 மில்லியனால் அதிகரித்திருந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட 05 செயற்பாடுகளுக்காக ரூபா 1,990,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் பௌதீக செயல்முன்னேற்றம் அடையப்படாதிருந்ததுடன் 03 செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 31,150,000 தொகையான மொத்தப் பணமும் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 14 செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையின் 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவு சேமிக்கப்பட்டிருந்ததுடன் 12 செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை மிகைத்து ரூபா 6,071,000 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பசுமை மீன்பிடித் துறைமுக செயற்திட்டம் (Green Fishery Harbour Project) மற்றும் கடல்சார் சுற்றாடல் மாசடைதலைப் பாதுகாப்பதற்கான தேசிய நிலையமொன்றினை உருவாக்குதல் (Establishment of National Centre for Marine Pollution Control) ஆகிய செயற்திட்டங்களுக்காக முறையே ரூபா 10,000,000 மற்றும் ரூபா 30,200,000 தொகைகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையில் 2009 ஆம் ஆண்டின் போது உருவாக்கப்பட்ட ஆய்வு கூடத்தின் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 31,162,704 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இது வரையும் ஆய்வு கூடத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அறிக்கைகளைப் பகிரங்கப்படுத்துவதற்கோ அல்லது அந்த அறிக்கையின் அடிப்படையில் சமுத்திரம் மாசடைதலைத் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருகோணமலை அலுவலகத்தில் ஆய்வுகூடமொன்றை தாபிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இதற்காக மீளாய்வாண்டின் மே மாதம் வரையில் ரூபா 1,500,693 தொகை செலவிடப்பட்டு 05 ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 மே வரையிலும் அந்த ஆய்வுகூடத்தில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கப்பல்களின் மூலம் ஏற்படுகின்ற சமுத்திரம் மாசடைதலைத் தடுப்பதற்கான சர்வதேச நியமங்களின் படி (MARPOL) கப்பல்களிலிருந்து வெளியேறும் எண்ணெய்க் கசிவு மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களை மீள் சுழற்சி செய்வதற்காக சர்வதேச ரீதியில் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்காக இது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) 2013 யூன் 28 ஆந் திகதிய 1816/37 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் படி நடவடிக்கை எடுத்து கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தினால் கழிவுப் பொருட்களை கடலுக்குள் போடுதல் தொடர்பாக மேற்பார்வை செய்து அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாட்டிற்காக முறையான திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் உரிய பிரகாரம் அனுமதிப்பத்திரம் வழங்கி சமுத்திரம் மாசடைதலைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரசபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(உ) தேசிய அவசர எண்ணெய் விசிறும் திட்டம் தொடர்பாக தெரிவுபடுத்தும் செயலமர்வு நடாத்தப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய திட்டம் நாளது வரையாக்குதல் 2014 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சமுத்திரம் மாசடைதலைத் தடுக்கும் துறைகளின் உதவியாளர்களின் கடமைச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக அதிகாரசபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட லொக் புத்தகங்களில் கையொப்பமிடும் செயற்பாடுகள் மற்றும் அவர்கள் மேற்பார்வை செய்யும் செயற்பாடுகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(எ) மாசடைதல் தொடர்பான பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்காக மீளாய்வாண்டின் போது மாத்திரம் ரூபா 699,730 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கப்பல்களிலிருந்து அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்யும் சேவைக்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமையை கணணிமயப்படுத்துவதற்காக (e Service) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 4,000,000 செலவில் கணணி மென்பொருள் முறைமையும் மீளாய்வாண்டில் ரூபா 1,411,004 செலவில் தொழில்நுட்ப உபகரணமொன்றும் பெறப்பட்டிருந்த போதிலும் இந்த முறைமை 2015 யூன் இறுதி வரையும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை

### 4.5 தாமதமான செயற்திட்டங்கள்

"கப்பல்களின் மூலம் அகற்றப்படுகின்ற கழிவு நீரிலிருந்து பரவும் நோய்க்கிருமிகள் இலங்கை கடல் வலயத்திற்குள் உள்நுழையும் முகாமைத்துவம்" இற்கான செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 5,578,344 தொகையும் மீளாய்வாண்டில் ரூபா 4,462,323 தொகையும் ஆக ரூபா 10,040,667 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2015 யூன் இறுதி வரையும் செயற்திட்டத்தின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

துறைமுகத்தை அண்மித்த அடிப்படைத் தரவு முறைமையொன்றை ஏற்படுத்தும் மெய்மையாய்விற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 873,750 பெறுமதியான நுணுக்குக்காட்டி கெமராவொன்று (Microscope Camera) அதிகாரசபையின் ஆய்வுகூடத்தில் இடவசதிகள் இல்லாமையினால் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தாபிப்பதற்கு கைளிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு மெய்மையாய்வுக்காக சமூகமளித்த விரிவுரையாளர் ஒருவரின் கோரிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டமையும் அந்த உடன்படிக்கைகள் முடிவடைந்த பின்னர் மீளவும் அதிகாரசபையின் ஆய்வு கூடத்தில் இந்த உபகரணங்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாகவும் தலைவரினால் 2015 யூலை 02 ஆந் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**4.7 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் பதவியணியினரில் 34 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் சிரேஷ்ட நிலையில் 05 பதவிகள் வெற்றிடமாக இருந்தமை அதிகார சபையின் நடவடிக்கைகளை செயற்திறனானதாக நிறைவேற்றுவதில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) 1980 ஏப்ரல் 01 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 162 ஆம் இலக்கத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம், கடமைகளுக்காக அறிக்கையிடுகின்ற சகல உத்தியோகத்தர்களும் தங்களது வருகை வெளியேறல் போன்ற இரண்டு சந்தர்ப்பங்களிலும் வருகைப் பதிவேட்டில் நேரம் குறிப்பிடப்பட்டு கையொப்பம் இடப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையின் பொது முகாமையாளர் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் படி மூன்று வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டியிருந்த போதிலும் அந்தப்பரீட்சை நடாத்தப்படாது சம்பள ஏற்றம் வழங்கப்பட்டிருந்தது. மனித வள அபிவிருத்திப் பிரிவினால் பராமரிக்கப்பட வேண்டிய ஆளணிக் கோவைகள் நிருவாக உத்தியோகத்தரின் கீழ் பேணப்பட்டமையினால் இவ்வாறான குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.8 வாகனப் பயன்பாடு**

அதிகார சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்று 2013 யூன் 24 ஆந் திகதி பழுதுபார்த்தலுக்காக தனியார் நிறுவனவொன்றிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இந்த வாகனம் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் மீள அதிகாரசபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல் நடவடிக்கைத்திட்டம்**

சமர்ப்பிக்கப்பட்ட வரைவு ஆண்டறிக்கையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயல்முன்னேற்றம் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றும் செயல்முன்னேற்றம் காலரீதியாக பரீட்சிப்பதற்கான முறைமையொன்றை நிறுவனம் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

**5.2 அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை**

2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சுற்றாடல் மாசடைதலைப் பாதுகாத்தல் அதிகாரச்சட்டத்தின் 51(1) ஆம் பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தேவையான 07 விடயங்கள் தொடர்பாக சட்ட மற்றும் ஏற்பாட்டு வரைவு தயாரிக்கப்பட்டு, சமுத்திரம் மாசடைதல் இழிவு படுத்துவதற்கும், வருமான வழிகளை உபயோகிப்பதற்கும் அதன் மூலம் முறையாக சமுத்திரம் மாசடைதலை தடுப்பதற்காக முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது கப்பலொன்றிலிருந்து எண்ணெய் கசிந்தமையினால் ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட்ட கடல் மாசடைதலை தடுக்கும் வகையில் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட சகல செலவினங்களையும், உரிய கப்பல்களின் உரிமையாளரிடமிருந்து அறவிடுமாறு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் இதற்காக செய்யப்பட்ட ரூபா 11,551,133 தொகையான செலவினத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கப்பல்களிலிருந்து எண்ணெய் வடிதல் தொடர்பாக அவசர திட்டங்களை அமுல்படுத்தல், மீன்பிடித் துறைமுகங்களில் கழிவுப் பொருள் முகாமைத்துவம், கடல் எல்லையிலிருந்து 300 மீற்றர் எல்லைக்கு அப்பால் கடலுக்குள் அகற்றப்படுகின்ற கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பு அறிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் போன்ற

விசணකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

விடயங்களுக்குரியதாக வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பாக 2015 யூன் 30 வரை தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்
(ஆ) நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திட்டங்களை அமுல்படுத்துதல்
(இ) பதவியணியினர் நிருவாகம்

ஒப்பம்:- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

11